# திசை

THISAI


## தமிழர் மாநாடு நிறைவேற்றிய தீர்மானங்கள்

அண்மையில் இலண்டனில் நடைபெற்ற சர்வதேச தமிழர் மாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன: □ கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படவுள்ள இணைப்புப் பற்றிய சர்வசன வாக்கெடுப்பு கைவிடப்பட வேண்டும். □ வட—கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு முறையான தேர்தலொன்று நடத்தப்படும் வரை இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படவேண்டும். □ மாகாணசபை குறித்து அண்மையில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களை இலங்கை அரசு ரத்துச் செய்ய வேண்டும்.


திசை 1 | 6-5-1989 சனிக்கிழமை | விலை: ரூபா 3-50 | முகம் 17


# இலங்கை அரசியலமைப்பு புனித சாசனமா, என்ன!

தமிழீழ விடுதலைப் புலிகளுடனும், ஜே. வி. பி. யினருடனும் தான் எங்கும் எந்நேரத்திலும் பேசத் தயார்; ஆனால் இத்தகைய பேச்சுக்களெல்லாம் - தான் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எல்லாம், அரசமைப்பிற்கு உட்பட்டதாகத்தான் இருக்கும் என புதிய ஜனதிபதி பிரேமதாச மேதினக் கூட்டத்தில் பிரகடனம் செய்துள்ளார்.

ஜனதிபதிக்கு சில 'அரிவரிப்' பாடங்களைக் கற்றுக் கொடுக்க வேண்டிய 'துர்ப்பாக்கியம்' எமக்கு ஏற்பட்டுள்ளது.

அரசமைப்புக்கள் வானத்திலிருந்து வீழ்பவையல்ல.

அவை, சில குறிப்பிட்ட வர்க்கங்களால் தத்தமது வர்க்க நலன்களுக்காக ஆக்கப்படுபவை.

1972இல் கலாநிதி கொல்வின் (இடதுசாரி) ஓர் அரசமைப்பினை உருவாக்கினர்.

தமிழ் மக்களின் அபிலாசைகளையும், கருத்துக்களையும் அவர் நிராகரித்து உருவாக்கிய அரசமைப்புத்தான், தமிழ் இளைஞர்களிடையே ஆயுதம் தாங்கிப் போராட வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டிவிட்டது.

ஜே. ஆர். வந்தார். புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கியதுடன், 16 தடவைகள் அதனைத் திருத்தவும் செய்தார் — தனது இனத்திற்கும், வர்க்கத்திற்கும், கட்சிக்கும் வசதியாக.

இத்தகைய 'திருத்தங்கள்' ஒன்றின் விளைவாகத்தான் 'அமிர்தலிங்கம் அன்ட் கொம்பனி' அரசியல் அனதைகளாக அலைந்து திரியவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

அதே அரசமைப்பின் 'புண்ணியத்தால்' ஜனதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரேமதாசாவும் அவரது ஐக்கிய தேசியக் கட்சியினரும் இந்த அடிப்படை உண்மைகள் எல்லாவற்றையும், தமது வசதிக்கேற்ப மறந்திருக்கலாம்.

ஆதலால் தான் அரசமைப்பிற்கு உட்பட்டு தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக புதிய ஜனதிபதி சிங்கள மக்களுக்கு முன்பறை சாற்றுகின்றார்.

இன்று நடைமுறையிலுள்ள அரசமைப்புத் தான் வட—கிழக்கிலும், தெற்கிலும் நடைபெற்று வரும் கோளாறுகளுக்கெல்லாம் முக்கிய காரணி என்பதனை புதிய ஜனதிபதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக்கட்டத்தில் பிரபாகரன்?

இப்பொழுது இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மிடையில் நடைபெற்று வரும் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள் வெற்றி பெற்ருல், இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையில் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தயாவும், முன்னைய யாழ்ப்பாணத் தளபதி கிட்டுவும் கலந்து கொள்வார்களென்றும், இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தையில் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் கலந்து கொள்வாரென்றும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியதாக 'டெய்லி நியூஸ்' (மே — 5) முன்பக்கத் தலைப்புச் செய்தியொன்றினை வெளியிட்டுள்ளது.

## இருபக்க நெருக்குவாரம்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்படக்கூடிய உடன்பாடு இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை மீருத வகையில் அமைய வேண்டுமென இந்தியா விரும்புகின்ற அதே வேளையில், எந்த உடன்பாடும் இலங்கையின் அரசமைப்பிற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என ஜனதிபதி பிரேமதாச அழுத்திக் கூறுகிருர்.

## படையினரின் நடவடிக்கை நியாயமற்றது

—ரெலோ

தம்மீது வடகிழக்கு அமைதிப் படையினர் எடுத்துவரும் நடவடிக்கைகள் நியாயமற்றவை என தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால் மாற்று நடவடிக்கைகளை தாம் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்றும் இவ்வியக்கம் எச்சரித்துள்ளது.

புலிகளுக்கும் தமக்கும் இரகசிய தொடர்புண்டு என்ற வீண் சந்தேகத்தின் பேரிலேயே தமது அலுவலகங்கள் மூடப்பட்டு, தமது உறுப்பினர்கள் தடுத்து வைக்கப் பட்டிருப்பதாக ரெலோ பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

## தெற்கோடு சேர்ந்து போராடுவோம்

— பத்மநாபா

மட்டக்களப்பில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் ஈ. பி. ஆர். எல். எப். செயலாளர் நாயகம் கே. பத்மநாபா இலங்கை அரசாங்கத்திற்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவரது எச்சரிக்கை வருமாறு: சிறீலங்கா அரசு தமிழ் பேசும் மக்களது ஆட்சியைக் கலைக்க, தமிழரினது நலன்களைப்பாதிக்க மாகாண அரசின் அதிகாரப் பரவலாக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தைகள்: எதிர்க்கட்சிகளின் நிலை?


அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்றுவரும் பூர்வாங்க பேச்சுக்கள் குறித்து எதிர்கட்சிகளின் நிலைப்பாடு என்ன?

ஐக்கிய சோசலிச முன்னணியும், முஸ்லிம்கொங்கிரசும் இப்பேச்சுவார்த்தைகளைப் பொதுவாக வரவேற்றுள்ளன.

ஆனல் பிரதான எதிர்க்கட்சியான எஸ். எல். எவ். பியின் நிலைப்பாடு என்ன?

'சண்டே ரைம்ஸ்' சிற்கு எதிர்க்கட்சி தலைவர் திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா அளித்த பேட்டியில், அவர் பின்வருமாறு கூறியிருக்கின்ருர்: "இப்பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவையாகவும் வெற்றிகரமானவையாகவும் அமையும் என எதிர்பார்க்கின்ருேம். அரசாங்கத்திஞல் விடு ைலப் புலிகளுக்கு க்கொடுக்கப்படும் வாக்குறுதிகளைப் பற்றியும் எமக்கு அறிவிக்கப்படும் எனநாம் எதிர்பார்க்கின்ருேம். அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ள இலங்கை–இந்திய ஒப்பந்தம் போன்று இன்ஞெரு மட்டகரமான அதிர்ச்சி மக்களுக்கு ஏற்படக்கூடாது என நாம் எதிர்பார்க்கின்ருேம். இந்திய—இலங்கை ஒப்பந்தத்தின் எல்லைக்குள்தான் இந்தப் பேச்சுவார்த்தைகள் நடைபெறப் போகின்றனவா என்பதையும் நாட்டிற்கு அரசாங்கம் அறிவிக்கவேண்டும்."

ஜனதிபதித் தேர்தலின் போது, தமது கட்சிப் பிரதிநிதிகள் வவுனியா காடுகளிலேயே புலிகளைச் சந்தித்த போது, கண்டனக் கணைகளைத் தொடுத்த யூ. என். பியினர் இவ்விடயத்தில் இரட்டை அளவு கோல்களை கையாளுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.





'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

**திசை**
THISAI

ஆசிரியர்:
மு. பொன்னம்பலம்

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்–ரூபா: 200/-
அரைவருடம்–ரூபா: 100/

இந்தியா
ஒரு வருடம்–ரூபா: 300/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் –
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:
118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

# அகங்கள் தோறும் ஆலயம் எழுக

'சிவராத்திரி– ஒரு வெறுச் சடங்கல்ல' என்ற அர்த்தம் பொருந்த ஒரு வாசகர் கடிதம் கண்டேன். அது என்னுள் பல தொடர் அலைகளை எழுப்பிற்று. அவற்றை 'இணைதல்' ஊடாகப் பகிரலாம் என எண்ணுகிறேன்.

''சடங்குகளும் மரபுகளும் சடங்குகளுக்கும், மரபுகளுக்கும் அப்பால் பட்ட உண்மையோடு ஒன்றிணைவதற்கே. ஆனால் தற்போதைய சமயச் சடங்குகளும், மரபுகளும் வெறும் சடலத்தைச் சுற்றி நிகழும் சடங்குகளாகவும், ஆசார மரபுகளாகவும் தேங்கி விட்டன. கும்பலிடை கள்வனைக் கை நழுவவிட்டு விட்டு சத்தமிட்டு ஆரவாரிக்கும் வெற்றுக் கூச்சல்களுக்கும், உண்மையை விட்டு விட்டு ஜம் பயடிக்கும் சடங்குகளுக்கும், இன்று வித்தியாசம் இல்லை.

சடங்குகள்–பல இன்று எமது ஆலயங்களில் 'விஞ்ஞானச் சடங்குகளாக' ஆகி விட்டன. அதாவது விஞ்ஞானம் கண்டு பிடித்த ஒலிபெருக்கி, ஒளிபெருக்கிகள் இன்று ஆலயங்களிலிருந்து அன்றுட வாழ்வு வரை அவசியமான அலறல்களாக மாறி விட்டன. சில வேளை நாமெல்லாம் ''ஓசை ஒலி எலாம் ஆனல் நீயே'' என்ற உண்மைக்கு மிக நெருங்கி விட்டோமோ என்று அதிசயப்படும் அளவுக்கு நமது 'ஒலி உலகம்' உள்ளது. ஒலிபெருக்கி இல்லாத ஆலயம் என்ன ஆலயம்! ஒலிபெருக்கியில் ஓதப்படாத மந்திரம் என்ன மந்திரம்! மொத்தத்தில் லயப்படுகின்ற ஆத்மாவை அவலப்படுத்தும் காரியங்களைப் புரிவனவாக, ஆத்மலயத்தை அநுசரிக்கவேண்டிய நமது ஆலயங்கள் செய்து கொண்டிருக்கின்றன.

''பள்ளித்தல மனைத்தும் கோயில் செய்குவோம்'' என்று பாரதி பாடினன். அதை மாற்றி ''உள்ளத்தல மனைத்தும் கோயில் செய்குவோம்.'' என்று பாடலாம் போலத் தோன்றுகிறது. உண்மையும் அதுதான். வாழவழியற்று ஏழைகள், அகதிகள் என்று புனர்வாழ்வுக்கு ஏங்கும் நடமாடும் தெய்வங்கள் நாதியற்று அலைய, படமாடும் கோயில்களுக்கு பூசைகள், புனஸ்காரங்கள், கும்பாபிஷேகங்கள், கோபுரங்கள் — தேவைதானு? புண்ணியம் எதிலே உண்டு? பசித்த வயிற்றுக்கு உணவிடாமல், அகதியைப் போஷித்து அன்பு காட்டாமல் இனவிடுதலைக்கு யாகம் வளர்க்கச் செலவழிக்கும் சீமான்கள் நிறைந்த நாடு நம் நாடு, எல்லாமே வெறும் ''பணச்சடங்கு'' வைபவங்களாக மாறி விட்டன. உண்மை சடங்குகளையும், சம்பிரதாயங்களையும், உடைத்து தன்னை ஒவ்வொரு அகங்களிலும் நிறுவும் காலம் எழுந்து வருகிறது. அந்த உண்மையும் இறைவனும் ஒன்றே. அந்த இறைவன் வதியும் ஆலயங்களாய் அகங்கள் எழுக. அதுவே உண்மை விழிப்பு ஆகும்.

ந. பிரேம்தாஸ்
புங்குடுதீவு–9.



## இணைதல்

### ஒரு Fanta வின் விலை ரூபா 7-50 !

சென்ற வாரத்தில் ஒரு நாள் எனது நண்பன் யாழ். மனோஹரா தியேட்டருக்குப் போய் 'அக்னி நட்சத்திரம்' படம்பார்த்தான். இடைவேளையின்போது அங்கு விற்பனை செய்யப்பட்ட Fanta வை (குளிரூட்டப்பட்டது) வாங்கிக் குடித்துவிட்டு, பத்துரூபாத் தாளைக் கொடுத்திருக்கிறன். விற்பனையாளர் 2–50 சதத்தை மிச்சமாகக் கொடுத்தார். அவன் ஆச்சரியத்தோடு விலையை விசாரித்தபோது அவர் மிரட்சியுடன் 7-50 சதம் என்று சொன்னராம். நண்பன் தியேட்டர் மனேஜரிடம் சென்று, வெளியில் 6 ரூபாவுக்கு விற்கும் Fanta வை ஏன் 7-50 க்கு விற்கிறீர்கள்? கொழும்பில் 4-50 க்கு விற்பதை 6 ரூபாவுக்கு வெளியில் விற்கும் போதே 1–50 சதத்தால் நாம் சுரண்டப்படுகிறேம். நீங்கள் அதையும் விட மேலும் சுரண்டவேண்டுமா? ஒரு நியாயமே இல்லையா? என்று குற்றம் சுமத்திக் கேட்டிருக்கிறன். அவர் கன்ரீனுக்கும் தமக்கும் சம்பந்தமில்லையென்றிருக்கிறர். நீங்கள் மனேஜர்; அதனல் பொறுப்பைத் தட்டிக்கழிக்கமுடியாதென நண்பன் வற்புறுத்தவே ''இப்படி முறைப்பாடு செய்யும் முதலாவது ஆள் நீங்கள்தான்'' என்று அவர் சமாளிக்கப்பார்த்தாராம்.

இதில்தான் நாம் கவனிக்க வேண்டிய முக்கிய விடயமிருக்கிறது. நாம் அலட்சியத்துடன் மௌனமாக இருப்பதுதான் அவர்கள் எம்மீது குதிரை விடுவதற்கு சாதக நிலைமையை ஏற்படுத்துகிறது. இன்று யாழ்ப்பாணத்தில் ஒன்றிரண்டு பொருள்களிலா நாம் சுரண்டப்படுகிறேம்? கல்வியறிவு அதிகமாகவுள்ள பிரதேசத்தைச் சேர்ந்த நாம் இவற்றை மாற்ற ஏன் முயலவில்லை? விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள் என்ன செய்கிறர்கள்? நுகர்வோர்சங்கங்களை அமைத்து இத்தகைய மோசடிகளை அம்பலப்படுத்தி, இவற்றை மாற்றலாம். ஒவ்வொரு முக்கிய ஊர்களிலும் நுகர்வோர் சங்கங்களை அமைக்கப் பெரியோர்களும் இளைஞர்களும் இனியாவது முயல்வார்களா? பல்வேறு நெருக்கடிகளுக்குள் அல்லாடும் சாதாரண மக்களின் வாழ்க்கைச் சுமையை, இதன்மூலம் ஓரளவாவது நாம் குறைக்கலாம்.

தி. ஆனந்தன்
கோவில் வீதி, நல்லூர்.

### கலாசாரப் பக்கங்கள் விரயமானவையல்ல

முற்போக்கு நோக்கம், சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழில் பிரசுரிக்கப்படும் வார இதழான 'திசை' ஏட்டினைப் படிப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

11-3-89 இதழில் பிரசுரிக்கப்பட்ட ஈழச் சகோதரன், இராஜ தர்மராஜா அவர்களின் கடிதம் மிக மனவருத்தத்தைக்கொடுத்தது. அவரது மடலுக்கு ஆசிரியர் விளக்கம் கொடுத்திருந்த போதிலும், எனது கருத்தையும் அச்சகோதரருக்குக் கூற விரும்புகிறேன். இன்றைய காலகட்டத்தில் ஆளும் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிகள், விடுதலை இயக்கங்கள் வரை அரசியல், பொருளாதார விடயங்கள் பற்றி விமர்சனம் செய்வதிலேயே தமது காலத்தைக் கழித்த வண்ணம் உள்ளனர். இது இப்படியாக இருக்கும்போது ஒரு இனத்தின் தனித்துவத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் அதனது கலை, கலாசாரம், இலக்கியம் என்பன அடங்குகின்றன. மேல் நாட்டவரே போற்றிப் புகழும் வகையில் அமைந்துள்ள எமது கலாசாரமானது 'மேற்கத்திய கலாசார வைரஸ்' களின் ஊடுருவலினுல் பாதிக்கப்பட்டு, அதன் விளைவுகள் தமிழ் மக்களின் நாளாந்த நடவடிக்கைகளில் புலப்படத் தொடங்கியுள்ளன. இந்நிலையில் மேலும் சிதைவடைவதைத் தவிர்க்குமுகமாகவும், தமிழ் மரபு பண்பாடு என்பவற்றைப் பேணிக்காக்கும் வகையிலும் செயற்பட வேண்டியது வெகுஜன தொடர்பு சாதனங்களின் தலையாயகடமையாகும். இதனை நிறைவேற்றுமுகமாக கலாசாரத்தின் மேம்பாட்டினை விளக்குவதற்கு முன்னுரிமை கொடுத்து பக்கங்கள் செலவழிப்பதில் விரயம் ஏது!

றெகான் கிறிஸ்ரோப்பர்
பேர்கன் பல்கலைக் கழகம்,
நோர்வே.

அமெரிக்கா, ஜேர்மனி,
பிரான்ஸ், கனடா, லண்டன்,
போன்ற நாடுகளுக்கு
செல்ல விரும்புகின்றவர்கள்
எம்மைத்
தொடர்பு கொள்ளவும்.

பாஃரேன் (Bahrain)
உடனடி வேலைவாய்ப்பு

தொழிலாளர் (கூலியாட்கள்), மேசன், தச்சு வேலையாளர், டீசல் – பெற்றேல் மெக்கானிக், ஒட்டோ எலக்ரிசன், எலக்ரிசன்ஸ் (வீட்டு வயரிங்) முதலியவற்றிற்கு
உடனடியாக ஆட்கள்
தேவை
சாப்பாடு, இருப்பிடவசதி
இலவசம்

**V. T. R. TRAVELS**
41, 3rd Cross Street,
JAFFNA.
A—10

# தமிழர்களும் யூதர்களும்

யூதர்களுக்கும் தமிழர்களுக்கும் நிரம்பிய ஒற்றுமையுண்டு. இத்தகைய கருத்து, பல் மட்டங்களில் பலரால் முன் வைக்கப்பட்டுள்ளது. ஈழத்தமிழர்கள், அறிவாலும் ஆற்றலாலும் யூதர்களுக்கு நிகரானவர்கள் மட்டுமல்ல அவர்களையும் மிஞ்சக்கூடியவர்கள் என்பதில் சந்தேகமில்லை. சுறுசுறுப்பாகவும், விவேகமாகவும் தம் கருமம் பார்ப்பதில் குறிப்பாக பொருளீட்டுவதில் யூதர்களுக்கு ஈழத்தமிழர்களும் சளைத்தவர்கள் அல்ல. மேலும் யூதர்களைப் போலவே ஈழத்தமிழர்களும் ஒரு சபிக்கப்பட்ட இனமாக — இவர்கள் எங்கெங்கு வாழ்கிறர்களோ அங்கங்கெல்லாம்—ஒடுக்கப்பட்டும் உரிமை பறிக்கப்பட்டும் நாடு கடத்தப்பட்டும் வாழ்வதில் இரு இனங்களுக்கும் ஒற்றுமையுண்டு. ஆனல் இரண்டு முக்கிய வித்தியாசங்கள் அவை முக்கிய வித்தியாசங்களும்கூட.

ஒன்று, இப்பொழுது யூதர்களுக்கென ஒரு தனி நாடு உண்டு. இரண்டு, யூதர்கள், தம் இனம் நாடு மொழி என வரும்போது எந்தவித சயநலமும் அற்று, உயிரையே பணயம் வைத்து அதன் மேன்மைக்கும் உயர்வுக்கும் உழைப்பதில் தலைசிறந்தவர்கள்.

பாலைவனமாகக்கிடந்த இஸ்ரவேலை கட்டியெழுப்புவதற்கு உலகின் எங்கெல்லாமோ சிதறுண்டு கிடந்த யூதர்கள் அங்கு வந்து திரண்டனர். தமது செல்வங்களை அள்ளி இறைத்தனர். பெரும் பெரும் விஞ்ஞானிகள், பேராசிரியர்கள், வைத்தியர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் என்று எல்லோரும் அருகருகே நின்று கூலியாட்கள் மாதிரி தம் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பணி செய்த அதிசயத்தை ஆர்தர் கோஸ்லர் எருதிய 'இரவின் கள்வர்கள்' என்ற நாவல் சித்திரிப்பதைக் காணலாம். மேலும் அவர்கள் ஒற்றுமைக்கு உதாரணம், என்ரபேயில் பணயம் வைக்கப்பட்டிருந்த தம்மக்களை மீட்டுவரும் பொருட்டு போடப்பட்ட திட்டத்தை, இஸ்ரவேல் நாட்டின் ஆளும்கட்சியும் எதிர்க்கட்சியும் சேர்ந்து கூட்டாகத் திட்டமிட்ட சாதனையே. இது உலக நாடாளுமன்ற வரலாற்றிலேயே மிகப் புதுமையான ஒரு நிகழ்ச்சியாகும். இது அவர்களின் இனரீதியான ஐக்கியத்தின் வெளிக்காட்டலாகும்.

ஆனல் நமது தமிழர்களோ இந்த விஷயங்களில் தலைகீழாகவே நடந்து கொள்கின்றனர். ஆர் கெட்டாலும் தான் வாழ்ந்தால் போதும். என்னும் தாரக மந்திரமே இவர்களின் வழிகாட்டியாகும். இதுவே இன்றைய தமிழினத்தின் தரித்திரத்துக்கெல்லாம் காரணமாக உள்ளது.

— வி. எம். பி. □

அல்பா இன்டஸ்றீஸ் லிமிட்டெட்
அல்பா உற்பத்திகள் தரமான நிகரற்ற உள்நாட்டு உருக்கு சாதனங்கள்.

- □ கோவைக்கான அலுமாரிகள் – இரண்டு லாச்சிகள், மூன்று லாச்சிகள், நாலு லாச்சிகள்
- □ உருக்கு அலுமாரிகள் – தனி இரண்டு லாச்சிகள், ஒரு லாச்சி
- □ நிறைவேற்றுனர் பாதுகாப்புப் பெட்டி
- □ வங்கிப் பாதுகாப்புப் பெட்டி
- □ உரொக்கப் பணப்பெட்டி
- □ பாதுகாப்பு அறைக் கதவுகள்
- □ சுவர் பாதுகாப்புப் பெட்டி
- □ வோட் றோப்
- □ மினி வோட் றோப்
- □ காரியாலய மேசைகள்
- □ சேவ்ரி லொக்கர்கள்

காரியாலய வீட்டுத் தேவைகளுக்கும், பாதுகாப்பு தேவைகளுக்கும் தரமான நிகரற்ற உள்நாட்டு சாதனங்களை தெரிவுசெய்ய அழைக்கிறர்கள். திருத்த வேலைகளுக்கும் பாதுகாப்பு ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.

திருச்செந்தூரன் றேடிங் கம்பனி
315, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
A013

# நமது கல்வியின் நோக்கங்கள் சரியானவைதானா?




இந்தியா சுதந்திரம் பெற்றபின் உங்கள் கல்வியின் நோக்கமென்னவாயிருக்கும் என்று மகாத்மா காந்தியிடம் கேட்கப்பட்டபோது அவர், ''குண நலன்களைக் கட்டியெழுப்புதல்(Charactor Building) துணிவு, பலம், நற்குணம், உன்னத நோக்கங்களுக்காக தம்மை மறந்து உழைக்கும் மனப்பாங்கு என்பவற்றை உருவாக்கவே நான் முயற்சிப்பேன். எழுத வாசிக்கத் தெரிவதைவிட இவை கூடிய முக்கியமானவை. நமது கல்வியறிவு இவற்றையடைவதற்கான ஒரு கருவி மட்டுமே'' என்று கூறினார்.

ஈழத் தமிழ் மக்கள் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுப்பவர்கள். தங்கள் பிள்ளைகளின் கல்விக்காக எவ்வளவு பணத்தையும் செலவு செய்யவோ அல்லது எவ்வித தியாகத்தையும் மேற்கொள்ளவோ

**சுமந்திரன்**

பின்னிற்காதவர்கள் என்றெல்லாம், மற்றவர்கள் நம்மவர்களைப் புகழ்ந்துள்ளார்கள். ஆனால் இன்று நாம் செய்வதென்ன? நம்முடைய கல்விக்கூடங்களில் குண நலங்களைப் பற்றிக் கவலைப்படுகின்றோமா? இன்று நம்முடைய பாடசாலைகளில் கல்வியின் நோக்கமே பரீட்சைகளில் விசேட சித்தி பெறல்தானே.

நம்முடைய பாடசாலைகளில் நடைபெறும் பரிசளிப்பு விழாக்களில் அதிபர், தமது மாணவர் பெற்ற பரீட்சை முடிவுகளைப் பட்டியல் படுத்தி வாசிக்கிறார். அதன் தன்மையைப் பொறுத்து அப்பாடசாலையின் வெற்றிகரமான செயற்பாடு தீர்மானிக்கப்படுகிறது.

ஒரு வியாபார நிறுவனம் அல்லது தொழிற்சாலையின் பங்குதாரர்களின் கூட்டம் நடைபெறும்போது, அதன் ஆண்டு இலாப நட்டக் கணக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. அதனைக் கொண்டு அந்த நிறுவனத்தின் வெற்றிகரமான தொழிற்பாடு தீர்மானிக்கப்படுகிறது. அத்தகைய ஒரு நிலையே இன்று பாடசாலைகளிலும் நிலவுகிறது.

மேலும் அத்தகைய வைபவங்களில், ஒரு பாடசாலையின் வளர்ச்சியைக் காட்டுவதற்கு ஆண்டுதோறும் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பதனைக் குறிப்பிடுகின்றனர். இந்த வளர்ச்சிக்காக பாடசாலையில் பல புதிய கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன. இங்ஙனம் மாணவர் எண்ணிக்கையை வரையறையின்றி அதிகரித்துச் செல்வது, பாடசாலையை ஓர் இயந்திரமயமான தொழிற்சாலையைப்போலாக்குவதாகும். நாம் உயிர்த்துடிப்பு மிகுந்த வாழ்க்கைப் பருவத்தினராகிய மாணவர்களைக் கையாளுகிறோம் என்பதனை மறந்துவிடுகிறோம். மாணவர்களிடையே குணநலன்களும் நல்ல ஆளுமையும் விருத்தியாக்கப்பட, மணவர்களைத் தனித்தனியாகக் கவனிக்கக் கூடியதாக இருக்கவேண்டும். மாணவர்களுடைய நண்பராக, வழிகாட்டியாக, ஆலோசகராக, அதிபரும் ஆசிரியர்களும் விளங்க மாணவர் எண்ணிக்கை மட்டுப் படுத்தப்பட வேண்டும். அல்லாவிடில் ஆசிரியர், மாணவர்களை அவர்கள் பெறும் பரீட்சைப் புள்ளிகளால் அளக்கும் ஒருவராகவே இருப்பார்.

இந்தப் பரிசளிப்பு விழா போன்ற வைபவங்களில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்பவர், ஒரு பெரிய பதவி வகிப்பவராக இருப்பது வழக்கம். இதன் மூலம் மாணவர்களுக்கு நாம் மறைமுகமாகச் சில செய்திகளைச் சொல்கிறோம். அதாவது நாம் கௌரவப் படுத்துவது போற்றுவது பெரிய பதவிகள் அல்லது பட்டங்களையே எனத் தெரியப் படுத்துகின்றோம். எனவே மாணவர்களும் எதிர்காலத்தில் எப்படியாவது பெரிய பதவிகளை அல்லது பட்டங்களைப் பெறவேண்டுமென்பது, அழுத்தப்படுகிறது. உன்னதமான இலட்சியங்களுக்காகவே வாழ்க்கையை அர்ப்பணித்தவர்களை நாம் பெருமைப்படுத்த முனைவதில்லை. முன்பு கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகவிருந்த திரு. **ஹன்டி பேரின்பநாயகம்** அவர்கள், தம் வாழ்க்கையில் உன்னத நோக்கங்களுக்காகவே பாடுபட்ட ஒருவர். பல்கலைக்கழகத்தினரும் பிரமிக்குமளவு அறிவும் ஆழமும் மிக்கவர். எனினும் அவர் வாழ்ந்த காலத்தில் நமது பிரபலமான கல்லூரிகள் அவரை உரிய முறையில் பெருமைப்படுத்தத் தவறிவிட்டன. இங்ஙனமே பண்டிதமணி **சி. கணபதிப்பிள்ளை** அவர்கள் தமிழ், சமய அறிவும் ஒழுக்கம் மிகுந்த வாழ்வும் வாழ்ந்தவர். அத்தகைய பெரியவரையும் நம் பிரபல பாடசாலைகள் கௌரவிக்கத் தவறிவிட்டன. இங்ஙனம் நம் செய்கைகளின் மூலம் நாம் குண நலன்களை விட பதவி, பட்டப்பெருமைகளே கூடிய முக்கியத்துவமானவையென மாணவருலகிற்குப் பறை சாற்றுகிறோம்.

மாணவர்களின் குணநலன்களை அபிவிருத்தி செய்வதில் ஆசிரியர்களின் முன்மாதிரியான நடத்தை, முக்கிய பங்கு வகிக்கிறது. உண்மையான கல்வி ஆர்வம் ஆசிரியரின் ஆளுமை மூலம் மாணவர்களிடம் தொற்றிக்கொள்ளும் ஒரு ''தொற்று நோய்''. ஆசிரியர் ஆளுமைக்கும் மாணவரின் ஆளுமைக்குமிடையே ஏற்படும் உயிரோட்டமான தாக்கத்தினால், அல்லது தொடர்பினால் பாய்ச்சப்படுவதே குணநலன் போன்ற உன்னத தன்மைகளாகும். இந்தச் செயற்பாடுகள் மறைமுகமாக மௌனமாக நடைபெறுபவை. அதனாலேயே இந்த அம்சங்களை ஒரு பாடசாலையின் **மறைமுக பாடத்திட்டம் (Hidden Curriculum)** என்பர். அடிப்படையான விடயமெனினும் ஆரவாரமின்றி செயற்படுவதனால், நம் பாடசாலைகளில் இவை புறக்கணிக்கப்படுவது கவனிக்கப்படுவதில்லைப் போலும். மேலும் இவ்விடயங்களில் ஆசிரியர்களின் முன்மாதிரி நடத்தை முக்கியமெனினும், இன்றுள்ள நிலையில் நம் ஆசிரியர்களில் பெரும்பான்மையினர் அங்ஙனமில்லையென்பதும் துரதிர்ஷ்டவசமானது.

பரீட்சையில் திறமையாகச் சித்தியடைவது, அதன் மூலம் அதிக பணவருவாய் தரும் தொழிலைப் பெற்று சுகபோக வாழ்க்கையை அமைத்துக் கொள்வது என்பதுவே, நம் கல்வியின் நோக்கமாகத் தற்போது இருந்து வருகிறது. இதனால் பரீட்சைகளுக்கு அளவுக்கு மிஞ்சிய முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இதனால் பல குழறுபடிகள் ஏற்படுகின்றன. பரீட்சைக்கு நேரடியாக உதவ முடியாத பல சிறந்த விடயங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. நாய் தன் வாலை ஆட்டுவதைவிட்டு அதன் வால் நாயை ஆட்டுவிக்கும் விசித்திரமான நிலை, தோன்றியுள்ளது. இவற்றின் தீயவிளைவுகளை நமது வாழ்க்கையில் ஏற்கனவே நாம் சந்தித்து, அவற்றால் பல துன்பங்களை அனுபவித்திருக்கிறோம். நமது படித்தவர்களிடையே;

ஒரு டொக்ரர் நல்ல குணவானாக இருந்தால்

ஒரு பொறியியலாளர் நல்ல குணவானாக இருந்தால்

ஒரு நிர்வாக அதிகாரி நல்ல குணவானாக இருந்தால்

ஒரு முதலாளி நல்ல குணவானாக இருந்தால்

ஒரு தொழிலாளி நல்ல குணவானாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று, நாம் பலமுறை ஏங்கியிருக்கிறோம். பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் எல்லோரும் இங்ஙனம் குணநலன் மிகுந்தவர்களாக இருப்பின், எல்லோருடைய வாழ்க்கையும் எவ்வளவு மகிழ்ச்சிகரமானதாக இருக்குமென எண்ணிப்பார்ப்பதுகூட, ஆனந்தமாயிருக்கிறது. இதனால்தான், எழுத வாசிக்கத் தெரியாதவர்களாக பெருமளவு இந்திய மக்கள் இருக்கும் போது அதனை அகற்றுவதைவிட முக்கியமாகக், குணநலப் பண்புகளை மாணவர்களிடையே கட்டியெழுப்புவது பற்றி மகாத்மாகாந்தி பேசினார்.

மனித வாழ்க்கையில் நாம் எல்லோரும் கல்வி கற்பதற்காக பாடசாலை என்ற அமைப்பினூடாக செல்லவேண்டியுள்ளது. அது எல்லோருக்கும் கட்டாயம் கிடைக்கவேண்டுமென்றே உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஆதலினால் அக்காலப்பகுதியில் நல்ல மனிதர்களை உருவாக்குவதில் நாம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். அதனை நாம் தவறவிடின் பின்பு நமது சமய நிறுவனங்களோ, அல்லது பிற சமூக தொழில் அமைப்புகளோ, அல்லது அரசின் சட்டங்களோ அதனைச் செம்மையாகச் செய்ய முடியாது. நமக்கு வெறுமனே நிபுணர்கள், திறமைசாலிகள் மட்டும் இருந்தால் போதாது. பண்பு மிக்க மனிதர்கள்தான் தற்போது மிக அவசரமான தேவை. அதனை நமக்கு வழங்கக்கூடிய பாடசாலைப் பருவத்தை நாம் சரியாகப் பயன்படுத்தாவிடின், அது மிகத் தவறான காரியமாகும். மேலும் காலம் காலமாக உன்னதங்களை உருவாக்கும் கருவியாக, நிலைக்களனாக விளங்கிய பாடசாலைகளைப் புறக்கணிப்பது நமக்கே நாசம் தேடும் முயற்சியாகும். நம்மிடையே ஒரு சில தனிப்பட்ட கல்லூரிகள் உள்ளன. அதிர்ஷ்டவசமாக அவை கூடிய சுயாட்சியுரிமை கொண்டவை. எனவே அக்கல்லூரிகளாவது மகாத்மா காந்தி விரும்பியதுபோல், நமது ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்காக உழைக்கும் குணநலப் பண்புள்ள மக்களை உருவாக்க, வழிகாட்டவேண்டும். அந்த உதாரணத்தை அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பாடசாலைகளும் பின்பற்றலாம். இங்ஙனம் நம் கல்வியமைப்பிலுள்ள தவறுகளைப் போக்கி, சரியான நோக்கங்களை நிறைவேற்றக்கூடியனவாக நம் பாடசாலைகளை மாற்றியமைக்கவேண்டும் □

## உணராப் பருவம்

— ஜீவன்

நிர்வாணம்
உணர்ந்தவேளை
துணிகளுக்காய்
சண்டையெனில் ......
மீண்டும்,
நிர்வாணம்
உணராப் பருவம்
காண்பது நன்றோ?

## பெருவெள்ளம்

பற்றை வெட்டிப் பண்படுத்தி
வாய்க்கால் வெட்டி
வரம்புகட்டி
தண்ணீர் பாய்ச்சிச் சேருக்கி
பசியோடு முளையெறிந்து
பக்குவமாய் பயிராக்கி
களையெடுத்துப் பசளையிட்டு
வேலிகட்டிக் காவலிருந்து
விளைவெடுக்கும் வேளையிலே
பாய்ந்துவந்த பெருவெள்ளம்
பாழடித்தது.
பசித்திருந்த வயிறுகள்
பற்றியெரிந்தன.
காத்திருந்த கண்கள்
நெருப்புதிர்ந்தன. □

# எங்கே நிற்கிறோம்?

**புதியவள்**

இன்றைய எமது சூழ்நிலையில் நாம் ஒவ்வொருவரும் எமது நிலையை மிகத் தெளிவாக சகல பரிமாணங்களிலும் மீளாய்வு செய்து, சரியான நோக்கில் செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம். சமூகத்தின் சகல அங்கத்தவர்களும் சமூக சூழ்நிலைகள், சமூக மாற்றங்கள் பற்றித் தெளிவாகத் தெரிந்திருந்தால்தான் சரியான பாதையினூடு சமுதாயத்தை உருவாக்க உறுதுணையாக இருக்க முடியும். எமது நாட்டின் இன்றைய சூழ்நிலைக்குரிய காரணங்களை நாம் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டியது எமது கடமையாகும். வெள்ளையனின் ஆட்சியின் பின் ஒற்றை ஆட்சியின் கீழ் வந்த தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்ன ? ஏன் இவ்வாருன சூழல் தோற்றுவிக்கப்பட்டது என்பதைக் கடந்த கால வரலாறு படம் பிடித்துக் காட்டுகிறது. தமிழர்கள் தமது நியாயமான கோரிக்கைகளுக்காக அகிம்சா ரீதியாகத் தொடங்கிய போராட்டங்கள் பின் ஏன், எவ்வாறு ஆயுத ரீதியான விடுதலைப் போராட்டமாகப் பரிணமம் பெற்று வளர்ச்சியடைந்தன ? பொதுவாக நாம் தமிழினம் ஒடுக்கு முறைக்கு உள்ளாக்கப்படுவதால் இப்போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன என்று கூறுகின்ருேம். ஆனல் எவ்வெவ்விதமான ஒடுக்குமுறைக்கு நாம் உள்ளாக்கப்பட்டோம் ? எப்போது இருந்து இவ் ஒடுக்குமுறைகள் ஆரம்பமாயின ? என்பதெல்லாம் ஏலவே தெளிவாக்கப்பட்டு விட்ட போதும் அதை மீட்டுப் பார்க்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. என்று மலையகத் தமிழ்மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதோ அன்றிலிருந்தே தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள் வெளிப்படையாக ஆரம்பமாயின. சாதாரணமாக, அந்நிய நாடொன்றில் தொடர்ச்சியாக ஐந்து, பத்து வருடங்கள் வசிப்பவருக்கே குடியுரிமை வழங்கப்படும் போது 150 ஆண்டுகளுக்கு மேலாக இந்நாட்டிலே வாழ்ந்து, நாட்டினது பொருளாதாரத்தின் அடிப்படையான பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கு முதுகெலும்பாக உடல் பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்து உழைத்த மக்கள் எதுவித உரிமையும் அற்றுச் சாதாரணமாக்கப்பட்டார்கள் அவர்களின் வாழ்க்கைத் தரம் மிக மிகப் பின் தங்கிய நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தது. இன்றும் அதே நிலை தான். மிகச் சாதாரண அடிப்படை வசதிகள் கூட கிடைக்கா நிலையில் எவ்வித சுதந்திரமோ உரிமையோ அற்ற நிலையில், உழைத்து ஓடாவதே அவர்களின் வாழ்க்கையாக நிர்ப்பந்திக்கப்பட்டது. இவ்வாறு மலையகத் தமிழர் நிலை ஒரு புறம்.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்த சிங்கள அரசு படிப்படியாக சிங்கள மொழியைத் தமிழ் மக்கள் மீது திணிக்க ஆரம்பித்தது. எமது தாய் மொழி இரண்டாம் மொழியாக்கப்பட்டு தனிச் சிங்கள மொழி அரசகரும மொழியாக்கப்பட்டது. அம்மொழி கல்லாதோருக்கு பதவி உயர்வு இல்லை என, சிங்கள மொழி தமிழ் இனத்தின் மீது திணிக்கப்பட்டது. இதனுல் வேலை இழந்தோர், பதவி இழந்தோர் எத்தனை எத்தனையோ. இங்கு, மொழி ரீதியான அடக்கு முறை வளர்ச்சியடைய தொடங்கியது.

திட்டமிட்ட வகையில் தொழில் ரீதியாகத் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட ஆரம்பித்தனர். உயர் உத்தியோகங்கள், பெரும்பான்மையான வேலை வாய்ப்புக்கள், பெரும்பான்மை இனத்தவருக்கே வழங்கப்பட்டன. நாடளாவிய அபிவிருத்திச் செயற்பாட்டில் எமது தமிழ்ப் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டன. எமது பிரதேசத்தை முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளோ, புதிய கைத்தொழில்களோ, புதிய அபிவிருத்தி முயற்சிகளோ செய்வது மிக மிகக் குறைக்கப்பட்டது. இங்கு, தொழில் ரீதியான – அபிவிருத்தி ரீதியான ஒடுக்கு முறை வளர்ந்தது.

எமது பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்கள் புதிய சிங்களப் பெயர் சூட்டப்பட்டு, அவை வட – கிழக்குத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுடன் இணைக்கப்பட்டு சிங்களப் பிரதேசங்களாகச் செயற்படத் தொடங்கின. அவர்கள் எம் தாயகத்தைக் கபளீகரம் செய்ய ஆரம்பித்தனர். கந்தளாயைச் சேர்ந்த எம் பகுதி ''சேருவாவில'' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிங்களப் பிரதேசமாக மாற்றப்பட்டமை போன்றவை, இன்று வெலிஓயா மாவட்டம் என்ற புதிய மாவட்டம் தோன்றும் வரை தொடர்ந்து கொண்டு இருக்கிறது. அண்மைக் காலப் பத்திரிகைச் செய்திகள் மூலம் எவ்வாறு தமிழர் துரத்தப்பட்டு, எவ்வளவு விரைவாக இக்குடியேற்றங்கள் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன என்பதை, அறிய முடிகின்றது. இங்கு, எம் மண் பறிபோகின்றது; எம் வாழ்நிலம் பறிபோகின்றது. இது மிக மிக மோசமான சுரண்டல் நிலையாகும்.

இதனை அடுத்துத் தரப்படுத்தல் என்ற முறையினைப் பல்கலைக்கழகத் தெரிவில் புகுத்தி அதன் மூலம், திறமை மூலம் உயர் கல்வி பெறும் எமது மாணவர்களின் வாழ்க்கை பாழடிக்கப்பட ஆரம்பித்தது. இத்திட்டமிட்ட முறையால், உயர் கல்வி பெறும் எமது மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுக் கொண்டே செல்கிறது. இதனுல் எத்தனை ஆயிரம் மாணவர்கள் பாதிக்கப்பட்டார்கள், பாதிக்கப்படுகிருர்கள், என்பது நாம் யாவருமே அறிந்ததே. இப்படிக், கல்வி ரீதியான ஒழுங்கு முறை ஆரம்பமானது.

இவை யாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல் நிகழ்ந்தவை காலத்துக்குக் காலம் நடந்து வந்த இனப்படுகொலைகள். 1956, 1958, 1977, 1981, 1983 என்று இவற்றை வரிசைப்படுத்திக் கொண்டு போகலாம். இங்கு எண்ணிக்கை தெரியாத மக்கள் எப்படிக் கொலை செய்யப்பட்டார்கள், துன்புறுத்தப்பட்டார்கள், எப்படி அவர்களின் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன, எப்படி மிருகத்தனமான பலாத்காரங்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்பனவற்றை வரலாறு அறியும். அக்காலகட்டங்களில் நடந்த கொடூரங்களை வர்ணிக்க வார்த்தைகள் போதாது. இவை, நாம் யாவரும் அறிந்ததுதான்.

இவ்வாறு சகல பரிமாணங்களிலும் தமிழ்மக்களின் உடல், உள, சமூக ரீதியான ஒடுக்கு முறைகள் எழுந்தபோதுதான் தமிழ் மக்கள் படிப்படியாக விழிப்புணர்ச்சியடைய ஆரம்பித்து தம் சதந்திரம், இறைமை, தன்மானம் காக்க சில அடக்கு முறைகளை உடைத்தெறியப் புறப்பட்டனர். ஆரம்ப கால கட்டத்தில் எமது தமிழ்த்தலைவர்கள் இலங்கையின் ஒற்றையாட்சித் தலைமையின் கீழேயே எமக்கான நியாயமான உரிமைகளில் ஓரளவையாவது பெற முயன்று, சிங்களத் தலைவர்களுடன் பண்டா–செல்வா ஒப்பந்தம், டட்லி–செல்வா ஒப்பந்தம் போன்றவற்றைச் செய்தனர். ஆனுல் அவை சிங்களப் பெருந்தேசிய இனவாதத்தின் நிர்ப்பந்தத்தால் உடனடியாகக் கிழித்தெறியப்பட்டு, இவர்களின் அகிம்சா ரீதியான போராட்டங்கள் யாவும் அரச படையினரால் ஆயுதம் கொண்டு, அடக்கப் பட்டன. இறுதியில் இவ் அகிம்சா ரீதியான போராட்டங்களால் எவ்வித பயனுமில்லாது போனதால், வன்முறையை வன்முறையால்தான் எதிர் கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத்திற்குத் தமிழ் மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். அதன் விளைவுதான் இளைஞர்கள் ஆயுதமேந்த வேண்டிய நிலை. ஒற்றை ஆட்சியின் கீழ் எமது உரிமைகளில் சிலதையாவது பெற முயன்ற தந்தை செல்வா போன்ருேர், தமது முயற்சியிலேயே தோல்வி கண்டு, இறுதியில் தனித் தமிழீழம் தான் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர விடிவைக் கொடுக்க முடியும் எனத் தீர்மானம் எடுக்க வேண்டியவர்களானுர்கள்.

பின் எவ்வாறு ஆயுதப் போராட்டம் பரிணமம் பெற்று வந்தது என்பதை நாம் அறிவோம். இவ்வாறு ஆரம்பமான விடுதலைப் போராட்டத்தில் 'பயங்கரவாதத்தை அடக்குகின்ருேம்' என்ற போர்வையில், பல்லாயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் அழித்தொழிக்கப்பட்டார்கள்; சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இனவாத அரசு போராளிகளைப் பயங்கரவாதிகள், வன்முறையாளர்கள் என்ற நாமம் சூட்டி உலகெங்கும் தன்செயலை நியாயப்படுத்த முனைந்தாலும், ஈற்றில் சிங்கள அரசின் கபட நாடகமே உலகெங்கும் வெளியாகிற்று; தமிழரின் போராட்டத்தின் நியாயமான தன்மையை உலகம் புரியத்தொடங்கியது; தமிழருக்காக உலகெங்கும் குரல்கள் ஓங்கி ஒலிக்கத் தொடங்கின. இந்த வேளையில் தான், பிராந்திய சுற்றுப்புறச் சூழ்நிலையின் தாக்கத்தோடு இலங்கை இந்திய ஒப்பந்தம் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டது. சரி, ஏதாவது நன்மையான சூழ்நிலை உருவாகுமோ எனம் பொறுத்தோம். ஆனுல், சகலதுமே இலவு காத்த கிளியின் நிலையாகப் போய்க்கொண்டிருப்பதை சகலருமே இன்று தெளிவுறப் புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் இருப்பது கண்கூடு. ''பதினுலாயிரம் தமிழ்க்குடும்பங்கள் பலாத்காரமாகக் குடியெழுப்பம்பட்டு, அங்கு மிக விரைவாக இரவு பகலென்றில்லாது சிங்களக் குடியேற்றம். முல்லைத்தீவு, வவுனியா பிரதேசங்களில் நிலங்கள் பறிக்கப்பட்டு புதிய வெலிஓயா மாவட்டம் உருவாக்கம்'' இப்படியான செய்திகள் ஒரு பக்கம். நாளாந்தம் வந்த வண்ணமுள்ளன. இப்படியே தொடருமானுல் இப் பேரினவாத அரசின் ஆட்சியின் கீழ், எமது நிலை என்ன? ஒடுக்குமுறைகளில் ஒன்ருவது நீங்கியுள்ளதா எனப் பார்த்தால், அங்கு சூன்யம் தான் தெரிகிறது.

''ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்'' தமிழ் பேசும் மக்களாகிய நாம் மதரீதியாக இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர் என பிரிவுற்று எம்முள் பிரிவினைப் படுவது எமது எதிரிக்கு எவ்வளது சாதகமான நிலையை உருவாக்கும் என்பதை நாம் சகலரும் உணர்ந்து கொண்டு இவற்றை இல்லாமல் செய்ய முயலல் வேண்டும். அண்மையில் திருகோணமலையில் நடந்த சம்பவம் இதற்குச் சான்று. இவை ஒரு பக்கம் நிகழ்ந்து கொண்டிருக்க, மறுபுறம் இந்தச் சூழ்நிலை நிர்ப்பந்தங்களால் அகதிகளாகவும், பொருள் தேடியும், வெளிநாட்டிற்கு எமது மக்கள் படையெடுத்த வண்ணமுள்ளனர். அங்கு மேற்கத்தைய கலாசாரத்திலுள்ள கீழ்மையான அம்சங்களை நாகரிகம் எனக் கருதி, அதில் மயங்கி, நமது கலாசார அம்சங்களைப் புறக்கணிக்கும் மக்கள் ஒரு புறம் அந்நிய மொழியையே தாய் மொழிபோல் பாவிப்பதுதான் நாகரிகம் என நினைத்து, தாய் மொழியாகிய தமிழே தெரியாது அந்நிய மொழியை மட்டுமே கற்பித்து, அக் கலாசாரத்திற்கு ஏற்றபடியே வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் கூட்டம் இன்னுெர் புறம், அகதிகளாக, தொழில் வாய்ப்பிற்காக அந்நிய நாடு சென்று தீய சேர்க்கையால் பணத்திற்காக போதைப் பொருள் விற்பனையாளராய், அதற்கு அடிமைப்பட்டவராய் பெண்ணை விற்பனைப் பொருளாக்கும் ஏஜெண்டுகளாய், ஒழுக்கம் தவறி நடப்பவராய்ச் சீரழியும் எமது இளந்தலைமுறையினர் மறுபுறம்.

மேலை நாட்டவர் எமது பண்பாடு, கலை, கலாசாரத்தின் சிறப்பை ஆன்மீகத்தின் மகிமையை உணர்ந்து எம்பால் கவரப்பட்டனர். நாமோ எமது சிறப்புகளை உணராத அவற்றைப் புறக்கணித்து, வரம்பு மீறிய வாழ்க்கையிலும், மேற்கத்தைய கலாசாரமும் இசை நடனமும்தான் நாகரிகம் என்றும் அதிலேயே முற்ருக மூழ்கிச் சீரழிகிருேம். எங்கும் எதிலும் நல்ல அம்சங்களை இரசிக்கலாம், ஏற்றுக் கொள்ளலாம். ஆனுல் எமது தனித்துவத்தை சிறப்பை, இழக்காமல் நாம் செயற்படவேண்டும். 'புதியன புகுதலும் பழையன கழிதலும்' வழமை. ஆனுல் எமது சிறப்பு வாய்ந்த பாரம்பரியங்களை, கலாசார அம்சங்களை பழைமை என விலக்க முற்படுவது முட்டாள்தனமாக முடியும். நாம் எமது கலைகளை வளர்ப்பதில் அக்கறை குறைந்தவர்களாக இருப்பதோடு, வசதியும் மிகக் குறைவானவர்களாய்த் தான் இருக்கின்ருேம்.

நாம் இன்று, யதார்தமான நிலையில் இருந்து எமது மதிப்பீடுகளைச் செய்யவேண்டியவர்களாக உள்ளோம். இன்று சகலதையும் சீர்தூக்கி ஆராய்ந்து எமது கடமைகள், செயற்பாடுகள் எப்படி அமைய வேண்டும் என்பதை, சரியான முறையில் திட்டமிடத் தவறினுல் எதிர்காலச் சந்ததிக்கு — எம்மினத்தவற்களுக்கு — துரோகம் செய்தவர்களாவோம். என்ன காரணத்துக்காக போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதோ அதற்கான விடையாக எமது வாழ்க்கைநிலையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டுள்ளதா என ஆராய்ந்தால் அங்கு சூன்யமான நிலைதான். நாலா திசையும் பெரும் எண்ணிக்கையான தமிழன் அலைந்து திரிந்து தன் தனித்துவத்தையும் பண்பையும் இழந்து வாழும் சூழ்நிலை. இவை நாளை எமது சமூகத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை மிக வேதனையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. அதனுல், இன்றைய சூழ்நிலையையும் அதன் தாக்கங்களையும் விளைவுகளையும் பூரணமாக உணர்வதோடு, தனிப்பட்ட சொந்த விருப்பு வெறுப்பு கோபதாபங்களுக்கு இடமளிக்காது எம் இனத்தின் நன்மை கருதி, சரியான முறையில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்று, அனைவரையும் கேட்டுக் கொள்வோம். □

## உயரமான மரங்கள்

அவுஸ்திரேலியாவில் உள்ள பிசின்மரம் (Gum-tree) 450 அடிக்கு மேல் வளருகின்றது.

யூகலிப்ரஸ் மரம் 300 அடிவரை வளரும்.

கலிபோர்ணியாவில் உள்ள சிங்கு ஒயிலியஸ் மரம் 200 அடிவரை வளருகின்றது.

கனடாவில் உள்ள றெட் வுட் (Red wood) மரங்கள் 300 அடி உயரமும் 30 அடி சுற்றளவுமுள்ள அடிப்பாகமும் கொண்டது.

பெருமரங்களை குடைந்து அவற்றூடாக பாதைகளை கலிபோர்ணியாவில் அமைக்கின்ருர்கள்.

— ரகுவரன்

# மூளைசாலிகள் வெளியேற்றம்

ஒரு நாட்டில் உள்ள மூளைசாலிகளான பொறியியல் வல்லுநர், வைத்திய நிபுணர்கள், முகாமை விற்பன்னர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர், தொழில்நுட்ப வல்லுநர், ஆசிரியர்கள், நில அளவையாளர் போன்ற பல துறைகளிலும் பயிற்சியும், அனுபவமும் பெற்றவர்கள் அந்த நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு உழைத்து ஊதியம் பெற்று சம்பாதிக்கும் நோக்கமாக வெளியேறுவதால் அந்த நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கப் படுமாயின் இந்த வெளியேற்றத்தை மூளைசாலிகள் அகல்வு அல்லது அறிவாழிகள் வெளியேற்றம் என்போம்,

சாதாரணமாக மேலே கூறப்பட்ட பல்துறை வல்லுநர்கள் ஒரு நாட்டில் அளவுக்கு மிஞ்சி இருப்பதனால் அவர்களுக்கு தொழில் வாய்ப்பு இல்லாமல் தங்கள் தாய் நாட்டைவிட்டு வேலையின்மை காரணமாக வெளியேறினால் இதனை மூளைசாலிகள் வெளியேற்றம் என்று ஒரு பிரச்சினையாக கருதுவதில்லை. மிதமிஞ்சி நிபுணர்கள் இருக்கிறார்கள் இதனால் வேலை வாய்ப்பு இல்லாததால் வேலை தேடி இவர்கள் போவதனால் அந்த நாட்டுப் பொருளாதாரம் பாதிக்கப்படாது. இவர்கள் வெளியேபோய் உத்தியோகம் செய்வதால் நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை குறையும். அந்நிய செலவாணி சம்பளமாக நாட்டுக்கு வரும், ஆகவே இவ்வாறான சூழ்நிலையில் மூளைசாலிகள் வெளியேற்றம் ஒரு பிரச்சினையல்ல,

ஆனால் மூன்றாம் மண்டல நாடுகளான வளர்முக நாடுகளில் தொழில் நுட்ப அறிவின்மை ஒரு மாபெரும் குறைபாடு. நாட்டை முன்னேற்ற வளம் உண்டு ஆனால் தொழில் நுட்ப வல்லுநர்கள் இல்லாததால் நாடு பின் தங்கி நிற்கிறது, இந்த நிலையில் உள்ள மூளைசாலிகளான பொறியியலாளர் வெளியேறினால் நாட்டு முன்னேற்றம் பாதிக்கப்படும்,

மூளைசாலிகள் வெளியேறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம் சுயநலமும் தேசாபிமான உணர்வு இன்மையுமாகும். வளர்முக நாடுகளில் பொருளாதார நெருக்கடி காரணமாக ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டிருக்கும். அறிவாளிகள் பொதுவாக பணக்காரவர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், இவர்களுக்கு குளிர் சாதனப் பெட்டி, தொலைக் காட்சி, குளிர்பெட்டிகள், மின் விசிறிகள், வாகனங்களில் மோகம் அதிகம். இவர்களிடம் பணமும் உண்டு, எனவே தங்கள் செல்வத்தால் இவைகளை வாங்கி அனுபவிக்க அவர்களுக்கு அளவுகடந்த ஆசை. அரசாங்கத்தடை காரணமாக இப்பொருட்கள் வாங்கி அனுபவிக்க முடியாத இவர்கள் வெளிநாடுகளில் உத்தியோகம் பெற்று உயர்ந்த சம்பளத்தையும் வாங்கி இடாம்பீக வாழ்வை அனுபவிக்க நாட்டிலிருந்து வெளியேறுகிறார்கள்.

இதற்கு உதாரணமாக 1970 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பதவியேற்றவுடன் இறக்குமதித் தடை உத்தரவு பிறப்பித்தது, இதைத் தொடர்ந்து பல துறைகளில் உள்ள மூளைசாலிகள் வெளிநாடுகளில் உத்தியோகம் பெற்று வெளியேறினார்கள்.

தமது பிள்ளைகளுக்கு ஆங்கிலக் கல்வி பயிலச் சந்தர்ப்பத்தைப் பெறவும், சர்வகலாசாலையில் இலகுவில் புகுந்து படித்துத்தேறிப் பட்டம் பெறவும் திறமை மட்டும் ஒரு காரணியாக வெளிநாடுகளில் இருக்கிறது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் சர்வகலாசாலைக்குச் செல்வதற்கு திறமையை விட்டு இனமத அடிப்படையிலும் பின்தங்கிய மாவட்ட அடிப்படையிலும் அனுமதி வழங்கப்படுகிறது. இதனால் அறிவாளிகள் தங்கள் பிள்ளைகளுடைய உயர் கல்விக்காகவும் அவர்கள் எதிர்காலத்தில் படித்தும் வேலை இல்லாமல் இங்கு இருந்து துன்பப்படாமலும் இருப்பதற்காக நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

சி.எஸ். சுப்பிரமணியம்

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அறிவாளிகள் வெளியேறுவது அதிகம். இவர்களுக்கு தங்கள் நாட்டில் எதிர்காலமில்லை. அரசியல் காரணத்தால் இவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். கல்வி உத்தியோகம் போன்ற துறைகளில் இவர்களுக்கு எதிர்காலமில்லை. ஆகவே வேறுநாடுகளில் சென்று தாமும் தம்பிள்ளைகளும் நல்ல முறையில் சீரும் சிறப்புமாக வாழ முடியும் என்பதற்காக வெளியேறுகிறார்கள்.

மூளைசாலிகள் வெளியேற்றம் வறியநாடுகளிலிருந்து செல்வ நாடுகளுக்கு நிகழ்கிறது. இதற்கு வேறும் ஒரு காரணமுண்டு. வறிய நாட்டில் வழங்கப்படும் சம்பளத்தை விட செல்வ நாட்டில் சம்பளம் குறைந்தது 30 அல்லது 35 மடங்கு அதிகமாக இருக்கிறது. இதைவிட வீடு, வாகனம், இலவச மருத்துவ வசதி மேலதிக வேலைக்கு மேலதிக சம்பளம் வழங்கப்படுவது மாத்திரமல்லாமல் இப்படிப் போனவர்கள் மேலும் தாங்கள் படித்து மேலோங்க அல்லது முன்னேற அல்லது ஆராய்ச்சி செய்ய போதிய வசதியுமுண்டு. வேலையும் சுகம். இலங்கையில் ஒரு வைத்தியர் குறைந்தது 60 (ஒருநாள்) நோயாளர்களைப் பார்வையிட வேண்டும். ஆனால் இங்கிலாந்தில் 5 தொடக்கம் 7 பேரை மட்டும் ஒரு நாளில் பார்வையிட்டால் போதுமானது.

மூளைசாலிகள் வெளியேறுவதால் நாட்டில் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது. முன்னேற்றம் தடைப்படும். நாடு பின்தங்கிய நிலையிலேயே இருக்கும். துரித முன்னேற்றம் அடையாது. மகாவலி அபிவிருத்தி போன்ற திட்டங்களை குறித்தகால எல்லைக்குள் நிறைவேற்ற முடியாது.

மூளைசாலிகள் வெளியேறுவதால் சில சிறு நன்மைகள் நாட்டுக்கு ஏற்படவும் கூடும். இவர்கள் உழைக்கும் பணம் அந்நிய செலாவணியாக நாட்டுக்குக் கிடைக்கும்.

சமீப காலத்தில் இடைநிலை வேலையாட்களும் வெளியேறுகிறார்கள். தச்சர், மேசன், மின் தொழிலாளி, பைப்வேலை செய்வோர், சாரதிகள் போன்றவர்கள். இவர்கள் இல்லாமலும் வேலைகள் திட்டங்கள் துரிதமாகச் செய்ய முடியாமல் எமது நாடு தவிக்கிறது.

மூளைசாலிகள் வெளியேற்றத்தைப் பற்றி ஆராய்ந்த திட்டமிடல் திட்ட அமுலாக்கல் திணைக்களத்தின் புள்ளி விபரம் பின்வருமாறுள்ளன.

புள்ளி விபர அடிப்படையில் மூளைசாலிகள் வெளியேற்றத்தை ஆராய்ந்தால் எமது நாட்டின் இழப்பு எளிதில் விளங்கும். 1979ஆம் ஆண்டில் 174 வைத்தியர்கள் நாட்டை விட்டுச் சென்றனர். அதன் பின் சராசரி மாதம் 11 வைத்தியர்கள் வெளிநாடுகளில் வேலை கிடைத்து செல்கிறார்கள். இவர்கள் சராசரி மாதம் 26,700 ரூபா தொடக்கம் 32,700 வரை வெளிநாட்டில் சம்பளம் பெறுகின்றனர்.

1979ஆம் ஆண்டு 440 பொறியியலாளர் (Engineers) நாட்டைவிட்டுச் சென்றனர். இதே ஆண்டு 700 கணக்காளர் வெளிச் சென்றனர்.

257 விரிவுரையாளர், 188 முகாமையாளர், 174 சிறு மருத்துவத் தொழில்நுட்ப வேலையாளர் வெளியேறியுள்ளனர்.

எமது நாடு ஒரு வளர்முக நாடு, எமக்கு அபிவிருத்தி மிக அவசியம். அரசாங்கம் பல துறைகளில் அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கியுள்ளது. இந்த நிலையில் பொறியியலாளர், நில அளவையாளர், வைத்தியர்கள் போன்ற மூளைசாலிகள் வெளியேறினால் நாட்டின் அபிவிருத்தி ஸ்தம்பித்துவிடும்.

இதைத் தடுத்து நிறுத்துவது மிகவும் கடினமான ஒரு வேலையாகும். □

# விலைகள் — பாவனையாளருக்கு எதிரிகளா?

சித்தார்த்தன்

சாதாரண மனிதன் ஒவ்வொருவனும் தன் தேவைக்குரியவற்றை வாங்கி, அனுபவித்து திருப்தியடைய முயலுகிறான். அதுவே சாதாரண வாழ்க்கை. தினமும் பணவருமானத்துக்காகவே தனது ஆற்றலை — சக்தியை பயன்படுத்துகிறான். தொர்ழிற்சாலையிலும், வங்கியிலும் பாடசாலைகளிலும் வேலை செய்கிறான். அந்த பண உழைப்பைக் கொண்டு தன் தேவைக்குரிய பலவற்றை போதியளவில் வாங்க சந்தை செல்கிறான். அவன் தன்னிடமுள்ள பணத்தில் எந்தளவை வாங்கிக் கொள்கிறான் என்பதில்தான் அவனதும், குடும்பத்தினதும் வாழ்க்கைத்தரம் தங்கியுள்ளது. அவ்வாறு எந்தளவு பொருட்களை அவன் பெறுவான் என்பது விலைகளினாற் தீர்மானிக்கப்படுகிறது.

## விலைகள் என்பதென்ன?

பொருளின் பெறுமதிகளை பணத்தினால் அளந்துகொள்வதுதான் விலை என்கிறோம். இந்த விலைகளை அதன் உற்பத்தியாளர்களே தீர்மானிக்கிறார்கள். ஒரு கிலோ மாவுக்குரிய விலை என்ன? ஒரு சவர்க்காரத்தின் விலை என்ன? ஒரு சாதாரண சஞ்சிகையின் விலை என்ன என்பதை அதன் உற்பத்தியாளனே தீர்மானிக்கிறான். சாதாரணமாக பால்மாடின்களில், சவற்கார உறைகளில் உற்பத்தியாளர்கள் விலைகளை பொறித்திருக்கிறார்கள். அதைப்பார்த்து நாம் வாங்குகிறோம். அதற்குள் தான் விற்பனை செய்யும் வியாபாரிக்கான தரகும் சேர்க்கப்பட்டிருக்கும். அது பத்து சதவீதமா இருபது சதவீதமா என உற்பத்தியாளருடன் வியாபாரிகள் ஒரு உடன்பாட்டுக்கு வருவதுண்டு. வாங்குபவன் பண்டத்தில் பொறிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய சில்லறை விலையைக் கொடுத்து வாங்குகிறான். இது பொதுவாக ஏற்கப்பட்ட நடைமுறையாயுமுள்ளது. ஆனால் இன்று யாழ்ப்பாணத்தில் இந்த நடைமுறை மிக அசிங்கமான முறையில் எவ்விதத்திலும் கட்டுப்படுத்தப் படாமல் — மீறப்பட்டு வருகிறது.

## வெளி நாட்டுச் சஞ்சிகைகள்

இன்று தமிழில் பெருமளவுக்கு இந்திய சஞ்சிகைகள் விற்கப்பட்டே வருகின்றன. நடுத்தர குடும்பத்துப் பெண்கள், தொழிலாளர் வாசிக்கும் குமுதம், ஆனந்தவிகடன், மங்கையர் மலர், மங்கை போன்ற சஞ்சிகைகளும் சிறுவர்களுக்கான கோகுலம், அம்புலிமாமா சஞ்சிகைகளும் இவ்வாறு பொதுவானவையாகவுள்ளன. இவற்றில் விலைகள் பொறிக்கப்பட்டே உள்ளன. ஆனால் விற்பனையாளர்கள் அதில் குறிக்கப்பட்ட விலையுடன் தொடர்பில்லாத ஒரு விலையில் (நான்கரை அல்லது ஐந்து மடங்கு விலையில்) விற்கின்றனர். ஏன் அந்த விலைக்கு விற்கின்றார்கள்? நாம் ஏன் அந்த விலை கொடுக்கிறோம்? இதுபற்றிய உண்மை விலையை எங்கே அறியலாம்? ஏன் இது ஒருவராலும் ஒழுங்குபடுத்தப் படாதுள்ளது. என்பன போன்ற பல கேள்விகள் பலர் மனதில் தனித்தனியாக வேதனையுடன் தோன்றி, அவசர நாளாந்த நடைமுறைகளின் பிரச்சினைகளின் முன் முதன்மை குறைந்து, மறைந்து போகின்றன.

ஒரு சஞ்சிகையின் விலை இந்திய ரூபாவில் போடப்பட்டிருந்தால், இலங்கை ரூபாவில் அதன் ஆகக்கூடிய விலை எதுவென அதன் பிரசுர கர்த்தாக்களே குறிப்பிட்டால் பிரச்சினைகள் இல்லை. அது நிகளாத நிலையில் பாவனையாளர் நியாயமற்ற முறையில் சுரண்டப்படும் நிலை கூடியே வருகிறது.

— ஒரு இந்திய ரூபாய் எத்தனை இலங்கை ரூபாய்களுக்குச் சமனாகும்?

— ஒரு ரூபாவிற்கான விற்பனைத் தரகுத் தொகை எத்தனை சதவீதம்?

— கொழும்பு போன்ற நகரங்களில் அதன் ஆகக் கூடிய சில்லறை விலை எதுவாயுள்ளது?

— யாழ்ப்பாணம் கொண்டுவர ஒரு சஞ்சிகைக்கு ஏற்படும் மேலதிகச் செலவு எவ்வளவாகும்?

— ஒரு சஞ்சிகையின் விலை யாழ்ப்பாண நகரின் பல கடைகளிலும் பல விலைகளில் விற்கப்பட வேண்டியதன் அடிப்படைகள் யாவை?

என்பன போன்ற கேள்விகள் வாசகர் முன்னிலையில் தோன்றுகின்றன. நகரில் வாசகர் வட்டங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், யாழ்ப்பாண மாநகர சபை, விலைக்கட்டுப்பாட்டுச் சபை, போன்ற பலவும் தொடர்புபட்டு இதில் அக்கறை காட்டி, இவற்றின் ஆகக் கூடிய உண்மை விலைகளை பத்திரிகைகளில் பகிரங்கப் படுத்துவது நல்லது அல்லது} குறிப்பிட்ட சஞ்சிகை வெளியிடும் நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு அவற்றின் விலைகள் இலங்கை ரூபாவிலும் (விற்பனைத் தரகு உள்ளடக்கியதாக) அதே சஞ்சிகைகளில் பிரசுரிக்கப் படுவதற்கான ஏற்பாடுகளில் கவனம் செலுத்தலாம். இவ்வாறான நல் முயற்சி விற்பனையாளர்கள் — கொள்வனவாளரிடையிலான நல்லுறவை வளர்க்கவும், நூல் விற்பனைகளைப் பெருக்கவும் உதவுவதோடு, வாசகர்கள் தாம் ஏமாற்றப் படவில்லை என்ற மனத்திருப்தியும் அடைவார்கள். கொழும்பில் ஐந்து ரூபா ஐம்பது சதமாக விற்கப்படும் சில சஞ்சிகைகள் இங்கு சில விற்பனை

(11ஆம் பக்கம் பார்க்க)

## கோகிலா மகேந்திரனின்
# தூவானம் கவனம்

*கலை இலக்கியக் கள வெளியீடு*
*1988. பக். 149. விலை : ரூபா 35*

கோகிலா மகேந்திரன் இன்று பலராலும் புகழ்ந்து பேசப்படும் ஓர் ஈழத்துப் பெண் எழுத்தாளர். இவரது மூன்று சிறுகதைத் தொகுதிகளும் இரண்டு நாவல்களும் இதுவரை வெளிவந்துள்ளன. தூவானம் கவனம் என்பது கடைசியாக வெளிவந்த இவரது நாவல். இதற்குப் பதிப்புரை எழுதியவர் இந்நூல் ஈழத்துத் தமிழ் நாவல் வரலாற்றில் தனிக் கணிப்பைப் பெறும் என நம்பிக்கை தெரிவிக்கிறார். இதற்கு அணிந்துரை எழுதியவர் இந் நாவலாசிரியர் அகில உலகிலும் பிரகாசிப்பார் என்பதற்குரிய அறிகுறிகளுள் ஒன்றாக இந் நாவலைக் கருதுகிறார்.

இந்நாவல் ஈழ விடுதலைப் போராட்டத்தைப் பகைப்புலமாகக் கொண்டது. ஈழத்திலும், ஈழவிடுதலையிலும் இவ்வாசிரியருக்குரிய ஆர்வமும் அக்கறையும் இந்நாவலில் வெளிப்படையாகவே தெரிகின்றன. அவ்வகையில் கடந்த சில ஆண்டுகளில் நம்மவர்களால் எழுதப்பட்ட ஈழவிடுதலைப் போராட்ட நிகழ்வுகள் பற்றிய நாவல்களுள் இதையும் ஒன்றாகக் கருதலாம். ஆயினும் துரதிர்ஷ்டவசமாக நமது வேறு பல நாவலாசிரியர்களைப் போலவே இதன் ஆசிரியரும் நாவல் கலையைப் பொறுத்தவரை தவழ் நிலையிலேயே இருப்பதால் இப் படைப்பும் ஒரு சமகால நிகழ்வுத் தொகுப்பு என்பதற்கு மேலாக ஆழமான கலை வெளிப்பாடாக மலராது போய் விட்டது.

இந்த நாவலின் மையக்கதை என்று சொல்லக் கூடியது இவ்வளவுதான். வீணா ஒரு விஞ்ஞானப்பட்டதாரி, தான் பல்கலைக் கழகத்தில் படிக்கும் காலத்தில் நாடகப் பயிற்சிப் பட்டறை ஒன்றில் சந்தித்த பொறியியலாளனும் கலையுணர்வு மிக்கவனுமான ஜீவனைக் காதலித்து, தன் கொள்கைக்கு ஏற்றபடியே சீதனம் கொடுக்காது திருமணமும் செய்து கொள்கிறாள். ஜீவன் ஒன்றும் அவ்வளவு மோசமான கணவன் அல்ல. ஆயினும் இருவரின் உளஅமைப்பு வேறுபாடுகளால் இருவருக்கும் இடையே சிறிது இடைவெளி. ஜீவன் பணம் சம்பாதிக்கும் நோக்கில் மனைவியையும் இரண்டு பெண் குழந்தைகளையும் பிரிந்து சவூதிக்குப் போகிறான். வீணாவின் தம்பி கோபி, ஏற்கனவே இயக்கத்தில் சேர்ந்து வீட்டை விட்டுப் போய் விட்டான். வீணா தாயோடும் குழந்தைகளோடும் 'ஷெல்' அடிகளுக்கு மத்தியில் தத்தளிக்கிறாள். கோபி போராளியாகத் திரும்பி வருகின்றான். அவர்களின் பாதுகாப்புக்காகப் பதுங்கு குழி வெட்டித் தருகிறான். அவனுடன் ஒப்புநோக்குகையில் பொருளுக்காகத் தங்களைப் பிரிந்து வெளிநாடு சென்ற கணவன் வீணாவின் பார்வையில் தாழ்ந்து போகிறான். தம்பி வந்ததுபோல் மறைந்து விடுகிறான். ஐந்துநாள் தொடர்ந்து விமானத் தாக்குதல். வீணா குடும்பத்துடன் பதினைந்து மைல் தொலைவிலுள்ள தோழி வீட்டில் தஞ்சம் அடைகிறாள். தோழியின் உபதேசத்தால் ஓரளவு மனத்திடம் அடைகிறாள். ஊர் நிலைமையை அறிந்த ஜீவன் விரைவில் திரும்பி வர இருப்பதாகக் கடிதம் எழுதுகிறான். அவனைத் திரும்பிச் செல்லவோ தனது குடும்பம் உடையவோ அனுமதிக்கக் கூடாது என்று வீணா தீர்மானிக்கிறாள்.

இந்த நாவலின் கட்டமைப்பு மிகவும் நொய்மையானது. கதை 1986இல் தொடங்கி 87இல் வளர்ந்து திடீரென 1990, 91க்குத் தாவி மீண்டும் 87க்குத் திரும்பிவந்து முடிகிறது. முதல் நான்கு அத்தியாயங்களில் பாடசாலை விளையாட்டுப் போட்டியை மையமாகக் கொண்டு கதை பின்னோக்கு உத்தியில் சொல்லப்படுகின்றன. அடுத்த ஆறு அத்தியாயங்களில் ஆசிரியரே நேரடியாகக் கதை சொல்கிறார். அடுத்த இரண்டு அத்தியாயங்கள் கதாநாயகியின் மனக்கற்பிதமாகச் சொல்லப்படுகின்றது. கடைசி அத்தியாயத்தில் மீண்டும் ஒரு விளையாட்டுப் போட்டியை மையமாகக் கொண்டு கதை முடிகின்றது.

நாவலின் ஆரம்பத்திலும் முடிவிலும் விளையாட்டுப் போட்டியை ஆசிரியர் தெரிந்து கொண்டது விளையாட்டுடன் வீணாவின் வாழ்க்கையை இணைத்துக்காட்டும் வசதிக்காக இருக்கலாம். ஆயினும் போட்டி நிகழ்வுகளுக்கிடையே வீணாவின் பின்னோக்கிய சிந்தனைகளும் விளையாட்டுடன் வாழ்க்கை நிகழ்வுகளை இணைத்துக் காட்டுதலும் செயற்கையாகவே உள்ளன.

இந்த நாவலில் பத்து இடங்களில் அத்தியாயங்களுக்கு இடையே திகதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. 17. 6. 86, 30. 12. 91, 17. 9. 87 என்பன உதாரணங்கள். நாவலின் கட்டுக்கோப்புக்கும் இத்திகதிகளுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. தனக்குத் தெரிந்த விசயங்கள், சம்பவங்களையெல்லாம் தன் நாவலில் சொல்லி விடவேண்டும் என்ற பேராசையும் நாவலாசிரியருக்கு இருக்கிறது. இதுவும் நாவலின் கட்டுக்கோப்பைக் குலைத்து விடுகின்றது. இவரது பாத்திரங்கள் எப்போதோ படித்த புத்தகங்களில் இருந்து பந்திபந்தியாக மேற்கோள்களை அடிக்கடி நினைவு கூர்வதும் செயற்கையாகவே உள்ளது.

கோகிலா தன்பாத்திரங்களை உளவியல் ரீதியில் அணுகுபவர் என்று பெயர் பெற்றவர். இந்த நூலிலும் அந்த அணுகுமுறை தெரிகின்றது. வீணாவுக்கும் ஜீவனுக்கும் இடையே ஏற்பட்ட இடைவெளிக்கு அவள் குடும்பத்தில் மூத்த பிள்ளையாகவும் அவன் கடைசிப் பிள்ளையாகவும் பிறந்ததே காரணம். மூத்தபிள்ளை நிதானத்தோடும் பொறுப்போடும் நடந்து கொள்ளும். கடைசிப் பிள்ளை அதற்கு எதிர்மறையான உள அமைப்பைப் பெற்றிருக்கும். ஜீவனை நிதானமும் பொறுப்பும் உள்ளவனாக்க வேண்டுமானால் வீணா தாய் போல் இருந்து அவனை மூத்த மகன் போல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதே நாவலாசிரியரின் தீர்வு (பக் 145). நமது நடைமுறை ஞானம் இந்த உளவியல் நோக்கின் விஞ்ஞானத் தன்மையைக் கேள்விக்கிடமாக்கலாம். மூத்த பிள்ளை பொறுப்பற்றவனாகவும் கடைசிப்பிள்ளை நிதானமும் பொறுப்பும் உள்ளவனாகவும் இருக்கும் பல குடும்பங்களை நாம் காண முடியும்.




எம். ஏ. நுஃமான்

ஆசிரியர் ஜீவன் மீது எவ்வித அனுதாபமும் காட்டவில்லை. வீணா அவன் மீது வெறுப்புக் கொள்வதற்குரிய ஆழமான காரணங்கள் எதுவும் நாவலில் கூறப்படவில்லை. நமது பெரும்பாலான கணவன்மார்போல் அவனும் தன் பெண் குழந்தைகளுக்கு வீடு கட்டுவதற்கும் சீதனத்துக்கும் பொருள்சேர்க்கவே வெளிநாடு போகின்றான். இயக்கங்களுக்கும் பொருளுதவி செய்கிறான். நாவலின்படி அவன் ஒழுக்கத்திலும் அப்பழுக்கற்றவன். இருப்பினும் அவன் தன்னினச் சேர்க்கையில் ஈடுபட்டு எயிட்ஸ் நோயோடு வந்து தனக்கும் அதைத் தந்துவிட்டு இறந்து போகிறான் என்று வீணாவினால் கற்பிதம் செய்ய முடிந்தது எவ்வாறு? பார்க்கப் போனால் வீணாவின் மன அமைப்பில்தான் ஏதோ கோளாறு இருக்கிறது. இது ஆசிரியரின் பார்வையிலும் பாத்திரவார்ப்பிலும் உள்ள கோளாறு.

கோகிலா தன் நாவலுக்கு தூவானம் கவனம் என்று ஏன் பெயர் வைத்தார் என்ற நியாயமான கேள்வியும் நம்முள் எழுகின்றது. இந்தத் தொடர் போராளியான கோபியின் வார்த்தைகள். யுத்தத்தைப் பெருமழையாகவும் சுதந்திர தமிழீழத்துக்குத் திரும்பிவரும் தமிழர்களைத் தூவானமாகவும் அவன் உருவகிக்கிறான். பெருமழையை விடத் தூவானம் ஆபத்தானது. ஆகவே நோயைக்கொண்டுவரும் தூவானம் பற்றிக் கவனமாய் இருக்கவேண்டும் என்பது அவன் கூற்று. ஆயினும் அகதிகளாகவும் தொழில் தேடியும் வெளிநாடு சென்றுள்ள பல்லாயிரக் கணக்கான

## கலைச்சாரல்

தமிழர்களையும் அவர்களின் மீள்வருகையினால் தமிழீழம் எதிர் நோக்கவிருக்கும் பிரச்சினைகளையும் மையமாகக் கொண்டதல்ல இந்த நாவல். நாவலின் கட்டமைப்பு அவ்வாறு கருதுவதற்கு இடம்தரவில்லை. அது இந்த நாவலில் இரண்டு அத்தியாயங்களில் ஓர் இடைச்செருகலாக, மையக் கதையோடு தொடர்பு இல்லாததாகவே வலிந்து புகுத்தப்பட்டுள்ளது. அந்த இரண்டு அத்தியாயத்தையும் நீக்கிவிட்டாலும் நாவலுக்கு ஊறு எதுவும் விளையாது. எனினும் பதிப்பாசிரியரும் (தலைப்பு வைத்ததன் மூலம்) நாவலாசிரியரும் இதுவே நாவலின் தொனிப்பொருள் என்று கருதுவதாகத் தெரிகின்றது. அப்படியென்றால் நிலைமை இன்னும் மோசமானது. இப்பிரச்சினை பற்றிய நாவலாசிரியரின் பார்வை பலவீனமானது என்பதையே அது காட்டுகின்றது. ஏனெனில் பல்வேறு சமுதாய நிர்ப்பந்தங்களால் அந்நிய நாடுகளுக்கு பல்லாயிரக் கணக்கில் சென்றவர்கள் எயிட்ஸ் நோயோடு திரும்பிவந்து தமிழீழத்தைச் சீரழித்து விடுவர் என்று கற்பனை பண்ணுவது அபத்தமானது. வெளி நாட்டுத் தொடர்பினால் கலாசாரச் சீரழிவு நிகழக் கூடிய அபாயம் எப்போதும் உண்டு எனினும் மறுபுறத்தில் அதனால் ஏற்படக் கூடிய அனுபவ விசாலம், அறிவு விருத்தி, தொழில் நுட்பத் தேர்ச்சி, மூலதன ஈட்டம், கலாசாரப் புரிந்துணர்வு போன்றவற்றினால் எதிர்காலத்தில் நமது சமூக பொருளாதார அமைப்பில் ஏற்படக் கூடிய சாதகமான விளைவுகள் பலவற்றை ஆசிரியர் காணத் தவறி விட்டார். இது ஒருபக்கப்பார்வையின், ஆழ்ந்து அகன்ற சமூகவியல் நோக்கு இன்மையின் விளைவாகும்;

இறுதியாகச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். பிறமொழிகளில் மட்டுமன்றி தமிழிலும் கூட நாவல்கலை பல உச்சங்களை எட்டியிருக்கின்றது. அவற்றோடு ஒப்பிடுகையில் நாம் மிகவும் பின்தங்கி இருக்கின்றோம் என்பது வெளிப்படை. நமது நாவலாசிரியர்களும் அவர்களைப் பற்றிப் புகழுரை கூறுபவர்களும் இது பற்றிய பிரக்ஞையோடு இருப்பதன் மூலம்தான் நாம் இத்துறையில் ஏதாவது சாதனைகள் புரிய முடியும். கோகிலா மகேந்திரன் கவனிப்புக்குரிய எழுத்தாளர் என்பதில் ஐயமில்லை. ஆனால் மேம்போக்கான புகழுரையாளர்களால் அவரது உண்மையான வளர்ச்சியும் விகசிப்பும் பாதிக்கப்படக்கூடாது என்பதே நமது கவலை. எதிர்காலத்தில் சிறந்த படைப்புக்களை அவர் நமக்குத் தரவேண்டும் என்பது நம்விருப்பு□

## பிரிட்டனில் வளர்ந்துவரும்
# இலவசப் பத்திரிகைகள்

பிரிட்டனில் வெளிவரும் இதழ்கள் பணத்திற்கு விற்கப்படுகின்றன; இலவசமாகவும் விநியோகிக்கப்படுகின்றன. கடந்த சில ஆண்டுகளாக விற்பனையிலிருக்கும் இதழ்களுக்கு விளம்பர வருமானம் குறைந்துள்ளது. புற்றீசல் போல் வெளிவரும் இலவசப் பத்திரிகைகளே இதற்குக் காரணம். இலவசப் பத்திரிகைகளின் விளம்பர வருமானம் அதிகளவு உயர்ந்துள்ளது.

கடந்த 4 வருடங்களில் பிரிட்டனில் 400 இலவசப்பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவற்றின் வெளியீடுகள் இரண்டரைக் கோடியிலிருந்து ஐந்துகோடி பிரதிகள் வரை ஆகும்.

இவ்விலவசப் பத்திரிகைகளைப் பெறுபவர்கள் இவற்றை இரண்டு தடவை பிரித்துப் பார்த்துவிட்டு குப்பையில் எறிந்து விடுகிறார்கள்.

ஆனாலும் இது அதிகளவில் மக்களிடம் போய்ச்சேர்வதால் விளம்பர நிறுவனங்கள் இவ் இலவச பத்திரிகைகளை வெகு வெகுவாக ஆதரிக்கின்றன.

உதாரணமாக ஒவ்வொரு நாள் காலையிலும் பாதாள ட்றெயின்கள் மூலம் ஐந்து லட்சம் மக்கள் லண்டனின் மத்திய பாகத்திற்கு வந்துசெல்கின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வர்க்கத்தினர். இவர்கள் பணம் கொடுத்துப் பத்திரிகை வாங்குவதில் அதிக நட்டம் கொள்வதில்லை, ஆகையால் இலவசபத்திரிகைகளை இவர்களிடம் விநியோகிப்பது இலகுவாக இருந்தது.

இவ் இலவச பத்திரிகைகளில் 5 விளம்பரப் பக்கங்களுக்கு ஒரு செய்திப் பக்கம் என்ற விதத்தில் பிரசுரமாகின்றது.

வேலை விளம்பரங்கள், மலிவான உணவு விடுதி விளம்பரங்கள், விமானச் சலுகைக் கட்டணங்கள் என்று மலிவான விளம்பரங்களை இந்தப் பத்திரிகைகளில் காணலாம்.

தி. தவபாலன்

நைன். ரு ஃபைவ், மிஸ் லண்டன், கேள் எபௌட் ரவுண் ஆகிய இலவச வார இதழ்கள் மேற்கூறிய மலிவு விளம்பரங்களை கூடுதலாக பிரசுரிக்கின்றன. இவை நான்கு இலட்சம் பிரதிகளுக்குமேல் விநியோகிக்கப்படுகின்றன.

இவற்றில் 'கேள் எபௌட் ரவுண்' பத்திரிகை அதிகளவு விளம்பர வருமானத்தைப் பெறுகின்றது. இதன் ஆண்டு மொத்த விளம்பர வருமானம் 50 லட்சம் பவுண்களாகும்.

இவை இலவசப் பத்திரிகைகள் என்பதால் தரமற்ற காகிதங்களில் அச்சிட்டு வெளியிடப்படுவன அல்ல. விற்பனையாகும் பத்திரிகைக்காகிதங்களை விட உயர்ந்தரகக் காகிதங்களிலேயே மிகத்தரமாக அச்சிடப்படுகுன்றன.

(11ஆம் பக்கம் பார்க்க)

# திரைப்படங்களில் குறியீடு

திரைப்படங்களில் சில காட்சிகளைக் காண்பிக்கையில் நேரடியாக அந்தக் காட்சிகளைக் காண்பிக்காமல், குறியீடுகள் மூலம் காண்பிக்கிறார்கள். இவ்வாறு அமைக்கப்படும் காட்சிகள் பார்வையாளர்களில் பதிவதோடு, அப்படத்தினை ஒரு வித்தியாசமான, உத்திகள் நிறைந்த படமாகக் கணிப்பிட வைக்கின்றன.

## செம்மீன்

'செம்மீன்' மலையாளப் படத்தில் கதாநாயகிக்குத் திருமணம் நடைபெறுகிறது. திருமணத்தில் சாப்பாடுபோடும் நிகழ்ச்சியை 'ராமு காரியத்' காட்டவில்லை. ஆனால் வேறு ஒரு நிகழ்ச்சியைக் காட்டினார். ஒரு குப்பைத்தொட்டியொன்றில் பல இலைகள் போடப்பட்டிருக்கும். அந்த இலைகளில் நிறையச் சாப்பாட்டு எச்சில்கள் இருக்கும். காக்கைகள் அவற்றைக் கொத்திக்கொண்டிருக்கும். ஒன்றிரண்டு நாய்கள் அந்த இலைகளைப் பிடித்திழுத்துக் கொண்டிருக்கும்.

## 16 வயதினிலே

பாரதிராஜா அருமையான குறியீடுகளைத் தன் படங்களில் பயன்படுத்தினார். சப்பாணி–மயிலுவின் காதல் வளர்வது: மாங்கொட்டையொன்று நிலத்தில் விழுகிறது. பின்பு அது செடியாகி வளர்கிறது. ஆனால், அது மரமாகிப் பழங் காய்க்கவில்லை. பரட்டை, மயிலுவைக் கற்பழிக்க உள்ளே செல்லும்போது அந்த மாஞ் செடியைத் தனது கால்களால் அழித்துவிட்டு உள்ளே செல்கிறான். இது அவர்கள் காதல் அழிந்தது என்பதை உணர்த்த.

## அலைகள் ஓய்வதில்லை

விச்சுவும், மேரியும் வெவ்வேறு ஜாதிகளைச் சேர்ந்தவர்கள். டீன் ஏஜ் (teen age)வயதினையுடைய பாடசாலை மாணவர்கள். இவர்களின் காதல் அரும்புவதை பாரதிராஜா அழகான குறியீடுகளால் உணர்த்துகிறார். இரு வெவ்வேறு மரங்கள். இது அவர்களுடைய சாதி, மத பேதத்தைக் காட்டுகின்றது. பூவுடன் கூடிய இரு மரங்களின் கிளைகளும் அருகருகே காணப்படுகின்றன. இது அவர்கள் எதிர்பாராமல் பாடசாலையில் எதிரெதிரே அடிக்கடி சந்திப்பதைக் காட்டுகிறது. தென்றல் வீசவும் அவ்விரு கிளைகளில் இருந்த பூக்களும் ஒன்றையொன்று உரசுகின்றன. தென்றற்காற்றை அவர்களின் வயதின் குறியீடாகவும், அதனால் இருவரும் காதலிக்க ஆரம்பித்துவிட்டார்களெனவும் பாரதிராஜா விரசமின்றி, ரஸிக்கத்தக்க வகையில் படமாக்கி உள்ளார்.

## சிந்து பைரவி

கதாநாயகி தனது அபிமானப் பாடகரும், நெருங்கிய நண்பருமான, ஏற்கனவே திருமணமான, நிம்மதியின்றி அலைபவருமான கதாநாயகனுக்குத் தன் உள்ளத்தை மட்டுமன்றி, உடலையும் அர்ப்பணிக்கிறாள். இந்தக் காட்சியைக் காட்டும்போது ஒரு வீணையை விரல்களால் மீட்டும் காட்சியை பல்வேறு கோணங்களில் எடுத்திருக்கிறார் பாலச்சந்தர்.

## அவர்கள்

கதாநாயகி மணமாகி விவாகரத்து வாங்கி வந்தவள். தன்னுடைய பழைய காதலனைச் சந்தித்துப் புது வாழ்வு வாழ முடிவெடுக்கிறாள். அந்தச் சந்தர்ப்பத்தில் தெருவில் ஒரு விளம்பரப் பலகையில் இருக்கிற வாசகம் காண்பிக்கப்படுகிறது. we march towards a better to-morrow (சிறந்த எதிர்காலத்தை நோக்கி நாங்கள் செல்கிறோம்) என்று.

## மைதிலி அருளையா

இதுவரை குறிப்பிட்ட குறியீடுகளனைத்தும் ஓரளவுக்கு விளங்கக் கூடியவை. ஆனால் மேலோட்டமாகவல்லாது ஆழமாக நோக்குகையிலேயே புலப்படும் குறியீடுகளையும் பலர் பயன்படுத்துகிறார்கள். இவைகள் நமக்குப் புரியாததால் கேலி செய்கிறோம். இவைகளைப்பற்றிச் சரியான முறையில் நாம் புரிந்துகொள்ளாததே இதற்குக் காரணம்.

## கடசிரார்த்தா

1977ஆம் ஆண்டு சிறந்த இந்தியப்படம் என்று பெயர் பெற்ற 'கடசிரார்த்தா'— முழுக்கமுழுக்கக் குறியீடுகளால் நிரம்பிய படம். கடசிரார்த்தா என்பது ஒரு சடங்கு. ஒரு மகனுக்கோ, மகளுக்கோ தந்தை......... அவர்கள் உயிரோடிருக்கும் போதே ஆற்றுகின்ற சிரார்த்தம் கடசிரார்த்தா.

இங்கு வேதியர் ஒருவரின் விதவைமகள் பள்ளி ஆசிரியர் ஒருவரிடம் கள்ளக்காதல் கொண்டு கர்ப்பிணியாகிறாள். கொடூரமான முறையில் கருச்சிதைவு செய்து கொள்கிறாள். வேதியர் தன்னுடைய மகளுக்குக் குடமுடைத்துச் சிரார்த்தம் செய்கிறார்.

இங்கு குடமுடைத்துச் சிரார்த்தம் செய்வது அவளது கருவைக் கலைத்ததற்குக் குறியீடு. இப்படத்தில் வேதம்படிக்கின்ற மாணவர்கள் பீடிகுடிப்பார்கள். சீட்டாடுவார்கள். இவைகள் அனைத்தும் ஒரு சமூகம் அழிந்து கொண்டிருக்கிறது என்பதைக் காட்டும் குறியீடு!

கதாநாயகி தற்கொலை செய்துகொள்ள நினைக்கிறாள். அப்போது அவள் பாம்புப் புற்றின் மேல் கைவைத்துப் படுத்துக் கொண்டிருக்கிறாள். அவள் படுத்துக்கொண்டிருக்கும் விதம், பாம்புப்புற்றைத் தேர்ந்தெடுத்தது முதலியவை அவளது முறையற்ற செய்கைக்கான குறியீடுகள்.

கிரீஷ் காசரவல்லி இப்படத்தை இயக்கியுள்ளார்.

## அங்குர்

பிரபல இந்தி இயக்குநரான ஷியாம் பெனகல் தனது 'அங்குர்' என்னும் படத்தில் சில குறியீடுகளைப் பயன்படுத்தினார். கதாநாயகன் ஏழை. அவன் எதையோ திருடிவிட்டான் என்பதற்காக ஊரார் அவனைக் கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி, ஊரை விட்டு ஓட்டி விடுகிறார்கள். கதாநாயகனின் மனைவியை அவர்களுடைய எஜமான் தன்னுடைய வலையில் வீழ்த்திக் கருவுறச் செய்கிறார். கதாநாயகன் கொஞ்ச நாள் கழித்துத் திரும்பி வருகிறான். எஜமானன் தன்னுடைய குற்றம் வெளிவருமோ என்ற குற்ற உணர்ச்சி மேலிட்டுக் கதாநாயகனைச் சவுக்கால் அடிஅடியென்று அடிக்கிறார். கதாநாயகன் அழுது கொண்டு செல்கிறான்.

இந்த அமைப்பை—எஜமானன் தொழிலாளியைச் சுரண்டும் நிலப் பிரபுத்துவ அமைப்பை—உடைக்க வேண்டும் என்பதை உணர்த்த இயக்குநர் குறியீட்டைப் பயன் படுத்துகிறார். ஒரு சிறுவன் எஜமானின் வீட்டின் கண்ணாடி ஜன்னலை ஒரு கல்லால் வீசி உடைக்கிறான்.

## அக்கிரஹாரத்தில் கழுதை

ஜோண் ஆபிரஹாம் இயக்கிய தமிழ்ப்படமான 'அக்கிரஹாரத்தில் கழுதை' ஒரு அற்புதமான குறியீட்டுப் படம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் ஒருவன் ஒரு சில தீவிர மாறுதல் செய்கிறான் என்று நினைத்துக் கொள்வோம்.

நியூட்டனின் இயக்க விதி நமக்கு ஞாபகம் வருகிறது. ஒவ்வொருவினைக்கும் (Action) ஒரு எதிர்வினை (Reaction) இருக்கிறது. சமூகத்தினரில் ஒருவன் மாறுதலானவற்றைச் செய்வது ஒருவினை. மக்கள் அதை எவ்வாறு ஏற்றுக் கொள்கிறார்கள் என்பது எதிர்வினை. இங்கு அக்கிரஹாரத்தில் கழுதை இந்த வினை, எதிர்வினைகளைப் புரிந்து கொள்ள வைக்கும், குறியீட்டால் புரிந்து கொள்ள வைக்கும் முயற்சி. அக்கிரஹாரம் என்பது ஒரு சமூகத்திற்கான குறீயீடு. கழுதையைக் கொண்டு வருதல் ஒரு தீவிர மாற்றத்திற்கான குறியீடு. இந்த மாறுதல் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். □

# தூவானம்

- பெண்களின் சுவடுகளில்
- நீர் வளையங்கள்

மரணத்துள் வாழ்வோம் (அரசியல் கவிதைகள்), தேடலும் படைப்புலகமும், (ஓவியர் மாற்கு சிறப்பு மலர்), ஊரடங்கு வாழ்வு ('ஈழநாடு' ஆசிரியத் தலையங்கங்கள்) போன்ற சிறப்பான நூல்களை வெளியிட்ட தமிழியல் நிறுவனத்தின் சமீப வெளியீடுகளாக, இரண்டு நூல்கள் வெளிவந்துள்ளன.

ஒன்று, சாந்தி சச்சிதானந்தம் எழுதிய பெண்களின் சுவடுகளில் என்ற ஆய்வு நூல். கட்டிடக் கலைத்துறையில் பட்டம் பெற்றிருப்பதோடு, பெண்கள் அமைப்புக்களில் பங்கேற்றுமிருக்கிறவரான சாந்தி "பெண்களின் சரித்திரம் முற்றுமுழுவதுமாக இருட்டடிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. மாறாக மனித குல வரலாற்றின் ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் பெண்களுடைய சாதனைகள் எவ்வளவு மகத்தான பங்கினை வகித்துள்ளன என்பதைப் பற்றி இந்த நூல் பேச விரும்புகிறது" என்று, நூலின் நோக்கத்தை தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாவது நூல், சண்முகம் சிவலிங்கத்தின் நீர் வளையங்கள் என்ற கவிதைத் தொகுதி, 54 கவிதைகள் இதில் இடம் பெற்றுள்ளன. கல்முனையைச் சேர்ந்தவரான சண்முகம் சிவலிங்கம் ஒரு முக்கிய கவிஞர் என்பதைத், தேர்ந்த வாசகனெவனும் ஏற்றுக் கொள்வான். நீண்டகாலமாகத் தமிழ்க் கவிதையை வளப்படுத்தி வரும் அவரது கவிதைகளின் தொகுப்பு இப்பொழுதாவது வெளிவந்திருப்பது, மகிழ்ச்சியைத் தருகிறது. இத்தொகுப்பிற்கு நல்லதொரு முன்னுரையை எம். ஏ. நுஃமான் எழுதியுள்ளார். அதில் வரும் பகுதிகள் சிலவற்றைக் கீழே தருகிறேன்:

"யாப்பிலே எந்த அளவுக்கு மோசமான கவிதைகள் உள்ளனவோ அந்த அளவுக்கு— சிலவேளை அதைவிட அதிகமாக— யாப்பை மீறி, வசனத்தில் எழுதப்பட்டவற்றிலும் மோசமானவையுண்டு. ஆகவே யாப்பு அல்லது யாப்பின்மைக்கு தானே ஒரு கவித்துவத் தகைமை இல்லை. செய்யுளும் வசனமும் கவிதைக்கான ஊடகங்கள் (Medium) மட்டும்தான். ஊடகம், தானே கவிதையாவதில்லை. அது கவிதையைத் தாங்கி நிற்கும் சாதனம்; அவ்வளவுதான். கவிதை என்பது கவிதைப் பொருளும், பொருளின் வெளிப்பாட்டு முறையும் இணைந்த ஒன்று. வெளிப்பாட்டு முறைதான் கவிதைப் பொருளுக்கு ஒரு கவித்துவத் தன்மையைக் கொடுக்கின்றதே தவிர செய்யுள் அல்லது வசனம் என்ற ஊடகம் அல்ல".

"1970களின் பிற்பகுதியில் இருந்து குறிப்பாக 1977க்குப் பிந்திய கடந்த பத்து ஆண்டுகளில் ஈழத்துத் தமிழ்க் கவிதையின் உள்ளீடு பெரிதும் மாறியிருக்கின்றது. கடந்த பல தசாப்தங்களில் சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தின் இன ஒதுக்கல் நடைமுறைகளின் விளைவாக வளர்ச்சியடைந்த தமிழ்த் தேசியவாதம் இக்காலப்பகுதியிலேயே ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்ட வடிவத்தை எடுத்தது. ராணுவ ஒடுக்குமுறையும் ஆயுதப் போராட்டமும் ஏற்படுத்திய சமூக விளைவுகளின் எதிரொலிகளே கடந்த பத்தாண்டுகளில் இலங்கைத் தமிழ்க் கவிதையின் பிரதான பொருளாகியது. இத்தகைய கவிதைகளைக் கொண்ட பல தொகுப்புக்கள் சமீபத்தில் வெளிவந்துள்ளன. சேரன், ஜெயபாலன் போன்ற சில நல்ல கவிஞர்களை இக்காலகட்டம் உருவாக்கியுள்ளது. 1980களில் சசியும் இக்காலகட்டத்தின் உணர்வுகளைத் தன் பல கவிதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். அத்தகைய 12 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இன்றைய வாழ்நிலையின் குரூரமான பல அம்சங்களை அவை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, பாடாத பாடல்கள், இப்போது, பிள்ளைக்கறி, ஆகியவை இன்றைய வாழ்நிலையின் குரூரம் பற்றிய மனதை உறுத்தும் படிமங்களைக் கொண்டுள்ள வீச்சான கவிதைகளாகும்."

இதோ, சண்முகம் சிவலிங்கத்தின் மீண்டும் எழுந்திருக்கையில் என்ற கவிதையில் வரும் சில வரிகள்:

எனது மயிர் பொசுங்கி விட்டது
எனது தோல் கருகிவிட்டது
எனது காதுச்சோணைகள் எரிந்துவிட்டன
இந்த ரணங்களோடுதான்
மீண்டும் எழுந்திருக்கிறேன்

இந்த ஊனங்களின்
தழும்புகளுடன்தான் நான் இனி வாழவேண்டும்
எனது மனவெளியோ
வெந்த வனம்போல் உள்ளது.
தீப்பிடித்துக் கருகிய புற்கற்றைகள்
இங்கொன்று அங்கொன்றாய் தெரிகிறது
இடையே சாம்பல் கலந்தமண்
அடி கருகிய புற்கற்றைகளிலிருந்து
இரண்டொரு பசும் முளைகள்
சின்னச் சின்ன பச்சைப் படர்கள்
தெரிகிறதா ?

நீலாம்பரன் □

திசையின் சிறுகதை

சென்றவாரத் தொடர்ச்சி

# நினைவுகள்

தெளிவத்தை ஜோசப்

எங்கள் பொட்னி மாஸ்டர் ஒரு கேரளாக்காரர். அவரைப் பற்றி யாருக்குமே ஒன்றும் தெரியாது. கல்லூரியிலேயே ஒரு அறையில் தங்கியிருந்தார். வகுப்பு நேரம் தவிர்ந்த மற்ற நேரங்களில் மாணவர்களுடன் பேச மாட்டார். செங்கல் போல் இறுகிய முகத்துடன் சதா 'உம்' மென்று இருப்பார். மனைவி உண்டா—மக்கள் உண்டா ஆங்கிலம் தவிர வேறு மொழி அவருக்குத் தெரியுமா உம்ஹும் ஒருவரும் அறியோம். அல்ஜிப்ரா—ஜியாமட்றி—பொட்னி – மூன்றும் அவருடைய பாடங்கள். அவருடைய பாடங்களில் நூற்றுக்கு எண்பது பேர் பாஸ் மார்க் வாங்கிவிடுவதை யாராலும் தடுக்க முடியாது. தோமஸ் மாஸ்டர் பாடம் என்றால் வகுப்பு கோவில் மாதிரி இருக்கும். அத்தனை அமைதியுடன்.

எனக்குத் தெரிய அவர் சிரித்தது ஒரே ஒரு தடவை.

பொட்னியில்அன்று பூக்களைப் பற்றி பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார்.

ஆண்பூ—பெண்பூ பற்றி கொஞ்சம் கூச்சத்துடனேயே விளங்கப்படுத்தினார். ஆண்பூவில் இருக்கும் மகரந்தம் பெண் பூவிற்கு தேனீ முதலியவற்றால் போய்ச் சேருகிறது. அந்தச் சேர்க்கையே பெண்பூவிற்கு ஒரு மலர்ச்சியையும் அதன் மூலம் நமக்குக்கிடைக்கும் காய் சீராக விளைந்து வருதலுக்கு ஒரு சக்தியையும் கொடுக்கிறது என்று விளங்கப் படுத்தினார்.

பாடம் எங்களுக்கு விளங்கி இருக்கிறதா என்பதைக் கவனிக்க அடிக்கடி கேள்விகள் கேட்பது அவருடைய வழக்கம்.

மகரந்தம் பூவுக்குப் பூ எப்படி மாறுகிறது என்று கேட்டார். முழு வகுப்புமே கையை உயர்த்தி இருந்தது. யாரிடமாவது கேட்க வேண்டுமே என்பதற்காக அமிர்தலிங்கத்திடம் ''யூ'' என்றார்.

''தேனீக்கள் மூலமாக'' என்றான் அவன்.

''ஈவன் ஏ பேபி வில் ஆன்சர் தட் மேன்'' என்றவர் ''இஸ் தேர் எனி அதர் வேஸ ......'' என்று கேட்டார்,

ஒருவருமே கையை உயர்த்தக் காணோம். ஒரு நிமிடம் கழிந்து என். கே. பி. யின் கை உயர்ந்தது.

''எஸ். பெரியசாமி'' என்றார்.

ஒரு விதமான ஓட்டை ஆங்கிலத்தில் ''எங்கள் தோட்டத்தில் பறங்கிப் பூக்களுக்கு இந்த மகரந்த மாற்று. என்னால் செய்யப்படுகிறது சேர்'' என்றான்.

முழு வகுப்புமே 'கொல்' என்றது. ஒரு கணம்தான்! தோமஸ் மாஸ்டரும் பல் தெரிய சிரித்து விட்டார். அதுவும் ஒரே கணம் தான்.

ஐயோ சிரித்து விட்டேனே என்று நினைத்துக் கொண்டாரோ தெரியவில்லை. உடனே முகத்தை சீரியசாக மாற்றிக் கொண்டு ''சிட் டவுன் யூ டொங்கி'' என்று கடுகடுத்தார்.

வடை கிழவிக்கு அருகே, சாம்பிராணி மரத்தடியின் சின்ன நிழலில் இன்னொரு மினி பொட்னி கிளாஸ் நடத்தினான் என். கே. பி. இன்ட்றவலின் போது.

அன்று மாலை வீட்டையடைந்ததும் பட்டியைத் தாண்டி; தண்ணீர்க்கானைத் தாண்டி; உரக்குழிக்கு அருகே ஓடித்திரியும் பறங்கிக் கொடியிடம் தான் போய் நின்றேன்.

பள்ளிக்கூடம் விட்டு, களைத்துப்போய் வந்த பிள்ளையைக் காணவில்லையே என்ற அம்மாவின் சத்தம் தென்றலில் தவழ்ந்து வந்து மெல்லிதாய் காதில் விழுந்தாலும் மனம் அதைக் கிரகித்து செயலாற்றும் நிலையில் இல்லை.

பூவும் பூவுக்கடியில் பிஞ்சுமாய் எதையோ எதிர்பார்த்து மலர்ந்திருக்கும் பூவையும் அடியில் பிஞ்சு இல்லாமல் அதே மலர்ச்சியுடன் நின்ற பூவையும் ஆச்சர்யத்துடன் பார்த்தேன்.

பிறகும் பார்த்தேன். ஓடித்திரியும் கொடி நிறைய அதோ ஒன்று—அதோ ஒன்று இங்கே ஒன்று—அங்கே இன்னொன்று... எத்தனை பூக்கள்.

அடியில் பிஞ்சுடன் இருப்பது பெண் பூ. பிஞ்சு இல்லாதது ஆண்பூ.

இந்தக் கொடியை மிதித்துக்கொண்டு எத்தனை தடவை ஓடியிருப்பேன். இந்தப் பூ வித்தியாசமே இப்போது தான் தெரிகிறது. என். கே. பியின் தாவரவியல் வாழ்க!

இலைகளை இலேசாக ஒதுக்கிக்கொண்டு கீழே அமர்ந்தேன். மலர்ந்திருந்த ஒரு பூவுக்குள் பார்த்தேன். பிஞ்சுக் குழந்தையின் குஞ்சு விரல்போல் — வெற்றிலைக் காய்போல் ஒற்றையாக நீட்டிக்கொண்டிருக்கிறதே! செம்மஞ்சள் நிறத்தில் மகரந்தம் பூத்துக்கொண்டு... இதுதான் ஆண்பூ. இலை ஆடாமல் கொடி ஆடாமல் மெதுவாகக் காம்புடன் கிள்ளி எடுத்துக் கொண்டேன். ஒட்டிக்கிடந்த மகரந்தம் ஆடிக்கொட்டி விடாமல் ஜாக்கிரதையுடன் பூவின் இதழ்களை பிய்த்து வீசினேன். மெதுமெதுவாக நகர்ந்து பிஞ்சுடன் இருந்த ஒரு பூவுக்குள் பார்த்தேன். பிஞ்சுக் குழந்தையின் ஐந்து விரல்களும் ஒன்றாகக் குவிந்திருப்பது போல் மகரந்தம் பூசிக் கொண்டு இருந்ததில் கையிலிருந்த பூவின் ஒற்றை விரலை லேசாகத் தடவினேன். இதில் இருந்த மகரந்தப்பொடிகள் அதில் ஒட்டிக்கொண்டன.

இதுதான் என். கே. பி. பொட்னி மாஸ்டரிடம் கூறிய மகரந்த மாற்றம்.

ஆறேழு பூக்களுக்கு அதே போல்செய்த பிறகே வீட்டுக்கு வந்தேன்.

அதன் பிறகு எங்கள் தோட்டத்தில் பறங்கிப் பிஞ்சுகள் வெம்பி விழுவது கிடையாது. அப்படியே விழுந்தாலும் ஒன்றிரண்டு தான்.

எங்களுடைய மாட்டுப்பட்டி. பட்டிக்குக் கீழே சலசலத்தோடும் தண்ணீர்க்கான் - உரமிகுதியால் தளதளத்து நிற்கும் கறிவேப்பிலைச் செடி......காய்கறித்தோட்டம், தோட்டத்தைத் தாண்டியதும் சேனை மரவள்ளி-வற்றாளை- சோளம்- கொள்ளு-என்று காலத்துக்குக் காலம் மாறும் பயிர்கள் —பயிர் மாறினாலும் தான் மாறாமல் நிற்கும் நாலைந்து கொய்யா மரங்கள்—இரண்டு மாமரங்கள் — பழங்களும் அணில்களுமாய்......

பெருமூச்சு விடுகின்றேன். அந்தக்காலம் இனி வருமா?

இப்போது ஆசைக்கென்று தேடிவாங்கினாலும் காய்ந்து உள்ளே மையம்பூத்த மரவள்ளிக்கிழங்கும் ஒடிக்க ஒடிக்க அறக்கு விழுந்த வற்றாளைக்கிழங்கும் .........

அந்தப் பசுமையான இனிய நினைவுகளை எப்படிக் கிளறி விட்டுவிட்டான் இந்தப் பள்ளி நண்பன் சமரசிங்க...

ஆளுக்கொரு ஸ்ப்ரைட்டுடன் அமர்ந்திருக்கிறோம்.

என்னை எங்கெங்கோ பறக்க விட்டுவிட்டு அவன் அமைதியாக ஸ்ப்றைட் உறிஞ்சிக் கொண்டிருக்கிறான்.

இந்தப் பெரியசாமியை ஒரு நாள் ஆமர்வீதியில் கண்டேன். மனைவியுடன் பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்தேன். ஓடிவந்தவன் அந்தப்பட்டப்பகலில்—பஸ் ஸ்டாண்டில்—என்னைக் கட்டிப்பிடித்து கழுத்தில் முத்தமிட்டு—என் மனைவிக்குக் கொஞ்சம் அசௌகர்யமாய் இருந்திருக்கும் —என்னைத் தெரிகிறதா? ..... நான் பெரியசாமி என்றான். ''டேய் டேய் டேய் என்னடா பெரியசாமி... பெரிய பெரியசாமி... என்.கே.பி.டா'' என்றேன்.

கண்கள் துளிர்க்க மீண்டும் அணைத்துக் கொண்டவன் ''ஐ ஆம் சொறி .....'' என்று என் மனைவியைப் பார்த்தான்.

ஒரு சைவஹோட்டலில் மனேஜராக இருப்பதாகக் கூறினான். மறுபடி அவனைச் சந்திப்பதற்குள் ஜூலை எண்பத்து மூன்று வந்துவிட்டது. பிறகு அவனையும் காணவில்லை அந்த ஓட்டலையும் காணவில்லை.

நான் பார்த்தபோது அவன் தனது ஐம்பதுகளில் இருந்திருக்க வேண்டும். ஏறத்தாழ என்வயதுதான்! தலைநிறைந்த நரையும் முகத்தின் முதுமையையும் தவிர ஆள் அப்படியேதான் இருந்தான்.

இன்றும் கூட ஆள்மட்டுமல்ல அவனுடைய இனிஷியல் கூட மறக்கவில்லை.

ஆனால் இந்த சமரசிங்க தான் நினைவில் வரமாட்டேன் என்கின்றான்,

ஆறிலிருந்து எஸ்.எஸ்.சி.வரை பெயிலானவர்கள்— ஓவர் ஏஜ் என்று விலக்கப்பட்டவர்கள் போக புதிதாக சேரும் ஓரிருவருடன் ஒரு நாற்பது நாற்பத்தைந்து பையன்கள் சேர்ந்தே படித்திருப்போம். ஐந்து வருடம், அத்தனைபேருமா மனதில் நிற்கின்றார்கள். என்.கே. பி, சனி, புகார்டீன்; மெண்டிஸ், மாரசிங்க, ஷெல்டன், வெள்ளையன், செல்வராஜ், சிவபெருமான், அமிர்தலிங்கம் ... என்று ஒருசிலர்தான்......

புதுக்காயத்தில் இருந்து ரத்தம் பீரிடுவதைப்போல் அத்தனையத்தனை பேரைப்பற்றிய நினைவுகளும் பீரிட்டுக் கிளம்பின.



காலிப் போத்தல்களை எடுத்துச் சென்றவன் பில்லை நீட்டினான். முன்பொக்கட்டில் கையைவிட்ட என்னைத் தடுத்தவன் தன்னுடைய பொக்கட்டுக்குள் கையை விட்டான். பிறகு தடுமாறினான். இருக்கும் அத்தனை பைகளையும் துழாவி முடித்து வெளிறிய முகத்துடன் ''ஐ ஆம் சொரி மேன்'' என்றவனைத் தட்டிச் சமாதானப்படுத்தி நானே பணம் கொடுத்தேன்.

இருவரும் வெளியேறி நடந்தோம்.

புகார்தீனின் குரங்குச் சேட்டைகள் என்னை மீண்டும் கல்லூரிக்கே இழுத்துச் சென்றன.

நான், பெரியசாமி, மெண்டிஸ், செல்வராஜ், அமிர்தலிங்கம் போன்றவர்கள் அருகருகே உள்ள தேயிலைத்தோட்டத்துப் பையன்கள். புகார்தீனோ டவுன்பையன். அவனுடைய அப்பா டவுனிலே ஒரு சின்னக் கடை வைத்திருந்தார். கையில் ஐந்துசதம் பத்துசதம் இல்லாதவர்கள் இடைவேளையின் போது வெளியே போகமாட்டார்கள். ஆனால் புகார்தீனோ வடை கிழவியிடம் கடன் வாங்குவான். கடலை உருண்டை காதர் தாத்தாவிடம் அந்திக்கு என்பான். அந்தத் தகுதி அவனுக்கு மட்டுமே இருந்தது. எங்களுடன் ஒட்டிப் பழகுவான். எங்களுடனேயே இருப்பான்.

சேஷ்டையில் குரங்கு தோற்றுவிடும். வரும்போதே வலதுகையால் வலதுவிலாப் பக்கம் சொறிந்து கொண்டே வருவான். பினதலையில் இடது கையால் ஓங்கித் தட்டிக் கொள்வான். தட்டுவிழும் அதேநேரம் நாக்கை வெளியே நீட்டுவான். பின்னால் விழுந்த அடியால் நாக்கு முன்னால் தள்ளிக் கொண்டதாம், துருத்திய நாக்குடனேயே ஒரு ஐந்து நிமிடம் உலாத்துவான். பிறகு கழுத்தடியில் கையை வைத்து தொண்டைத்தோலைப் பிடித்து உள்ளே இழுப்பான். நாக்கு மெதுவாக உள்ளே போகும். பார்ப்பதற்கு அவன் இழுத்தால் உள்ளே போவது போலவேயிருக்கும்.

நாக்கால் ஒரு கன்னத்தில் உருண்டை காட்டுவான். முட்டிக்கொண்டிருப்பதை கையால் குத்தி மறுகன்னத்தில் காட்டுவான். மாறிமாறி இரு கன்னங்களிலும் காட்டிவிட்டு இரண்டு கன்னங்களையும் ஒரே நேரத்தில் குத்தி நாக்கை வெளியே நீட்டிக்கொள்வான்.

புகார்தீனின் இந்த வித்தையை மற்றவர்களும் செய்து பார்த்ததுண்டு. செய்து தோற்றதுண்டு. கன்னத்தில் காட்டும் உருண்டை மற்றவர்களுக்கு கன்னம் முழுதும் இருக்கும். அல்லது நாக்கு வாய்வழியே லேசாகத் தெரியும். ஆனால் அவனோ கன்னத்தின் உருண்டையைக் கூர்மையாக ஒரு பளிங்குக் கோலியின் அளவில் காட்டுவான். அந்தப் பளிங்குக் கோலியை கன்னத்தில் அங்குமிங்கும் ஓடவிட்டுக் காட்டுவான்.

இது எங்கள் ஒருவராலும் முடியவில்லை! கூர்மையான அவனுடைய நா விநோதமானது. வியக்கச்செய்வது.

ஒரு தடவை அவன் இப்படி நாக்கை வெளியே நீட்டிக்கொண்டிருந்தபோது பிரதர் பிரண்டன் வந்துவிட்டார். வெளியே நீண்ட நாக்குடன் அப்படியே நின்று விட்டவன் தொண்டையை விரலால் இழுத்து நாக்கை விழுங்கிக் கொண்டான்.

''வாட் மேன் யூ ஆர் ஷோயிங் மெஜிக்'' என்றவர் அவனை அத்துடன் விடவில்லை. கல்லூரி ஆண்டுவிழாவில் கூடுதல் கரகோஷம் பெற்றது.

(9ஆம் பக்கம் பார்க்க)

22. 11. 1943 இல் பிறந்து 07. 04. 89 இல் மறைந்த க. பரராஜசிங்கம் (துருவன்) 'பரா' என நண்பர்களால் செல்லமாக அழைக்கப்பட்டவர். கலைச்செல்விப் பண்ணையால் உருவாக்கப்பட்ட இவர், எண்ணிக்கையில் குறைவான கதைகள் எழுதியிருந்தாலும் தரத்தில் உயர்வைப் பேண முனைந்தவர். இன்னும் நாடகம், நகைச்சுவை, அறிவியல் போன்றவற்றிலும் ஈடுபட்டு பன்முக ஆற்றலை வெளிக்காட்டியவர். 1966 இல் புவியியற் பட்டதாரியாகி, குச்சவெளி உதவி அரசாங்க அதிபராகப் பணிபுரிந்தவர். 1964 இல் கலைச்செல்வியில் வெளிவந்த **மனிதன்** என்னும் சிறுகதையை இவரது 31 ஆம் நாள் நினைவாக (08. 5. 89) வெளியிடுகிறோம்.

# மனிதன்

## துருவன்

சுந்தரம் நடந்து கொண்டிருந்தார்.

நடக்கும்போது அவரைப் பார்த்தால் நடக்கிறாரா? நிற்கிறாரா? என்றே தெரியாது. காலை மெதுமெதுவாக எடுத்து வைத்து அவர் நடப்பதைப் பார்த்தால் பரிதாபமாகத்தானிருக்கும்.

காலம் உடம்பிலே பதித்து விட்ட முதுமைத் திரைகள் அவருடலெங்கும் தெளிவாகத் தெரிந்தன. குழிவிழுந்த கண்கள்; அதிலும் குழிவான நெஞ்சு. என்றோ ஒருநாள் அவரும் அழகாகத்தானிருந்திருக்க வேண்டும். ஆனால் இப்போது அவரைப் பார்ப்பவர்கள் முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொள்கிறார்களே? சேற்று நிலம் வெயிலால் கீலம் கீலமாக வெடித்திருக்குமே, அப்படித்தான் அவருடலெல்லாம் வெடிப்புக்களாக இருந்தன. சின்னப் பையன்கள் அவருக்கு வைத்திருக்கும் பட்டப் பெயர் பொருக்கர்!

யார் கேலி செய்தாலும் அவர் கலலைப்படுவதில்லை, கவலைப்படுவதால் மட்டும் தனது உடல் வேறு மாதிரியாக மாறிவிடும் என்று அவருக்கு நம்பிக்கையில்லை. சுந்தரம் மற்றவர்களைப் போல் இளமைச் சுகங்களை அனுபவித்துக் கொண்டு ஓடியாடித் திரியவேண்டியவர்தான்: ஆனால்...

கையிலே ஒரு தடியையும் ஊன்றிக் கொண்டுதான் அவர் இன்று நடக்கிறார். நடக்கிறாரா? அசைகிறார்.

சின்ன வயதிலிருந்தே அவருக்குத் 'தொய்வு' அப்போதெல்லாம், ஆடிக்கொருமுறை அமாவாசைக்கொரு முறையென்று எட்டிப் பார்த்தநோய் திருமணமான பின் இடைக்கிடை பார்த்து... அடிக்கடி பார்த்து... இப்போது தொய்வே அவராய்; அவரே தொய்வாய் ஆகிவிட்டது.

வீட்டுக்குள் நுழைகிறார். தடியை ஒரு மூலையில் சாத்திவிட்டுக் கிழிந்துபோன சாக்கிலே மெதுவாக இருக்கிறார், வீடென்று பேர்படைத்த அந்தக் கூடு முடமாவடியில் — நெடிதுயர்ந்த அந்த அரசமரத் தடிக்குப் பின் புறமாக அமைந்திருந்தது. அவரைப்போலவே இளமையிலேயே ஒட்டலாகிப் போய் விட்ட நாய் அவரது காலைச் சுற்றிச் சுற்றி நக்கிவிட்டு அதே சாக்கிலேயே சுருண்டு படுத்துக் கொள்கிறது. சுந்தரம் நாயைத் தடவிவிடுகிறார்; அது வாலைப் பலமாக ஆட்டுகிறது. சாக்கிலிருந்து புழுதி பறக்கிறது.

அடுப்பிலிருந்து சுருண்டு சுழன்று வந்து கொண்டிருக்கும் புகை அவரைத் திக்குமுக்காட வைத்தது. இரண்டு மூன்று முறை இருமினார். காறி, பனை மட்டையால் சுற்றி அடைத்திருந்த அடைப்புக்குள்ளால் வெளியால் துப்பினார்.

அடுப்புப் புகைந்து கொண்டேயிருந்தது!

அவரது மனைவியை அந்தப் பக்கமே காணவில்லை. கொஞ்ச நாட்களாக அவள் வீட்டிலேயே அதிகமாக இருப்பதில்லை. அடிக்கடி வெளியே எங்கோவெல்லாம் போய்விட்டு வருவாள்; ஆனால் அவற்றையெல்லாம் சுந்தரம் பெரிதுபடுத்துவதில்லை. முன்பு அவள்மீது வைத்திருந்த அதே அன்பு அவருக்கு இன்னமும் மாறிப் போய்விடவில்லை. அவளைச் சந்தோஷமாக வைத்திருக்க முடியவில்லையே என்று பல தடவைகளில் அவர் கவலைப்பட்டிருக்கிறார். கண்ணீர் விட்டிருக்கிறார்.

புகை அதிகமாகியது; எழுந்து சென்று அடுப்பை ஊதினார். கண்கள் எரிந்தன. தொடர்ந்து ஊதிவிட்டுத் தொடர்ந்து இருமினார். அடுப்பிலிருந்த பானையின் மூடியைத் திறந்து பார்த்தார்—

சோறு வெந்துகொண்டிருந்தது!

புகையின் கொடுமை தாங்காமல் முற்றத்திற்கு வந்தார். அப்போதுதான் மனைவியும் எங்கிருந்தோ வந்தாள். அவளுக்கும் அப்படியொன்றும் வயதாகிவிடவில்லை. இளமைக் கவர்ச்சி அவளிடம் அப்படியேயிருந்தது. அவர்தான் இப்படியாக......

"செல்லம் அடுப்பிலே சோத்தை விட்டுவிட்டு எங்கையெல்லாம் லாத்திப்போட்டு வாறாய்? சோறு அடிப்பிடிச் செல்லேபோம்." அவர் சாந்தமாகத்தான் சொன்னார்; அவள்தான் சீறினாள்.

"கேள்வி கேக்கிறதிலை மட்டும் குறைஞ்சுபோகேல்லை...... நான் நாலுவீடும் திரிஞ்சு உப்புப் புளி, முழகாயெண்டும் சேர்க்க வேண்டியிருக்கு"

"என்ன செய்யிறது செல்லம்? மேடிருந்தால் பள்ளமும் இருக்கத்தானே செய்யும்!"

அவள் விறுக்கென்று உள்ளே புகுந்து கொண்டாள். அவர் தடியை எடுத்துக் கொண்டு மெதுவாக வெளியே நடந்தார். மனைவியின் பேச்சு அவர் உள்ளத்தை உறுத்தியது. அத்தனைக்கும் அவர் 'உழைச்சுக் கொட்டாமலும்' இல்லை. நோய் அதிகமாக இல்லாத நேரங்களில் சுருட்டுச் சுருட்டப்போவார். இயலாதவர் என்ற காரணத்தால் அரசாங்கமும் ஏதோ கொஞ்சம் பணம் கொடுத்தது. மனைவியை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டுமென்பதில் அவருக்குக் கொள்ளை ஆசை. தான் அழுக்கு வேட்டியுடுத்தாலும் மனைவி நன்றாக உடுத்தால்தான் அவருக்குத் திருப்தி.

அவர் நடந்தார்.

வாசிகசாலைக்குப் பக்கத்திலிருக்கும் அந்த உருளைக் கல்லிலிருந்து கொண்டபின் அவருள்ளத்தில் பெரும் ஊசலாட்டம் அல்ல, உளைச்சல்; வேதனை. அந்த உருளைக் கல்லில் தான் அவர்எப்போதும்இருந்து கொள்வார். வீட்டிலிருந்து தொய்வு 'இழுத்து' மனைவிக்கு அதிக தொல்லை கொடுக்கக் கூடாது என்பதுதான், அடிக்கடி அவர் அதிலிருந்துகொள்வதற்கு முக்கிய காரணம்.

'செல்வம் ஏன் இப்படி ஒரேயடியாய் மாறிப் போனாள்? பாவம் அவள், இப்பெல்லாம் அவளுக்கு என்ன சுகத்தை என்னாலை குடுக்க முடியுது?.... கடவுளே அவள் நல்லாயிருக்க வேணும், மற்றப் பொம்பிளையளைப்போலை சந்தோஷமாய் இருக்கவேணும்; ஒரு குறையும் அவளுக்கு வரக்கூடாது.'

அந்த நல்லமனம் எண்ணிக் கொண்டது!

அன்றும் சரி, இன்றும் சரி செல்லம் சந்தோஷமாக இருந்தாலே அவருக்குப் போதும், அரச மரத்திலிருந்து உதிர்ந்த சருகுகள் அவருடலில் விழுந்தன. அவர்கூட இப்போது உதிர்ந்த சருகுதானா? உதிர்ந்த சருகும் உபயோகப்படுகிறதே.

அவருக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. தடியை எடுத்துக் கொண்டு மீண்டும் வீட்டை நோக்கி நடந்தார். தூரத்தில் அவரைக் கண்டபோதே 'ஒட்டல்' நாய் ஓடிவந்து காலைச் சுற்றி நக்கியது. குனிந்து நாயைத் தடவி விட்டார்.

□ □

செல்வம் சோறுபோட்டாள். உண்மையிலேயே சோறு அடிப்பிடித்துத்தான் போயிருந்தது. அவர் பேசாமற் சாப்பிட்டார். சாப்பிடும் போதே செல்லம் ஏதோ முணுமுணுத்தாள். அடுத்தவீட்டுக்காரர்கள் படம் பார்க்கப் போகிறார்களாம்.... எல்லாரும் கொஞ்சக் கொஞ்சக் காசு போட்டுக் கார்பிடித்துப் போகிறார்களாம் ........ தானும் அவர்களுடன் போகப் போகிறாளாம்.

இதுதான் அவள் முணுமுணுத்த மந்திரம்.

சாப்பிட்டு முடிந்ததும் தட்டத்திலிருந்த வாடல் வெற்றிலையை எடுத்துப் போட்டுக் கொண்டார். பின் வேட்டித் தலைப்பில் முடிந்துவைத்திருந்த மூன்று ரூபாவையும் கொஞ்சம் சில்லறையையும் எடுத்துச் செல்லத்தின் கையிற்கொடுத்தார்.

"அவையளோடை நீயும்போட்டுவா செல்லம். என்னாலை உன்னைப் படத்துக்குக் கூட்டிக் கொண்டு போகேலாது. நான் வருத்தக்காரன். நீ சந்தோஷமாய்ப் போட்டுவா... ம் கெதியாய் வெளிக்கிட்டுப்போ"

□ □

சுந்தரம் வீட்டை நோக்கித் தள்ளாடித் தள்ளாடிப் போய்க்கொண்டிருக்கிறார். ஒரு கையிலே தடி, இன்னொரு கையிலே ஏதோ சரைகள், தெருவில் வைத்து வண்டிக்காரனிடம் வாங்கிய பொரிகடலையும் ஓமப் பொடியும் அவற்றுள் இருந்தன.

செல்லத்துக்கென்றே ஆசையோடு வாங்கப்கட்டவை அவை!

அவளின்ரை ஆசையொண்டையும் நிறைவேற்றாமல் விடக் கூடாது. "ஆசைப்பட்டாள் – அண்டைக்குப் படத்துக்கும் போட்டுவந்திட்டாள்'. மனைவியின் மகிழ்ச்சியில்தான் நிறைவு காண்கிறார் அவர்.

கையிலிருக்கும் சரைகளைப் பார்த்துக்கொண்டே நடக்கிறார். இடையே ஒரு இருமல். அடிவயிற்றிலிருந்து இழுக்குமாப்போல் இழுத்து வேலியோரத்தில் சளியைத் துப்பிவிட்டுத் தொடர்ந்து நடக்கிறார்.

காகமொன்று அவர் கையில் வைத்திருக்கும் சரைகளைக்

(11ஆம் பக்கம் பார்க்க)

# நினைவுகள்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

புகார்தீனின் மெஜிக் ஷோதான்.

மந்திரவாதியின் சிஷ்யனாக மேடையில் நின்றது நான்.

தன்னை மறந்து சிரித்த என்னை மெதுவாகத் தட்டி தயக்கத்துடன் பேசினான் சமரசிங்க.

அவன் பர்சை மறந்துவிட்ட விஷயம் எனக்குத் தெரியும். தயங்கித் தயங்கிப் பேசினான்.

"ஒரு ஐம்பது ரூபாய் இருந்தால் கொடேன்....... கொண்டுவந்து தருகிறேன். வெரி அன்போச்சுனேட் ஐ காவ் கம் மைனஸ் மை பர்ஸ் ..."என்றான். 'ஏதோ அவசரமாக வாங்கிக்கொண்டுபோக வேண்டும்' என்றான்.

என்னிடம் இருந்ததே அவ்வளவுதான்! பஸ்ஸுக்குத் தனியாக இருக்கிறது.

"ஏன் அலட்டிக் கொள்ளுகிறாய். எத்தனை வருடங்களின் பின் காணுகின்றோம்... வாட் இஸ் பிப்டி ருப்பீஸ்..." என்றவாறு சட்டைப்பையில் இருந்து எடுத்து அவனிடம் நீட்டினேன்.

பிறகும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு பிரிந்தோம்.

விடைபெறும் போது கூட என்னைத் தன்னுடன் ஆர்மி குவாட்டர்ஸ்வரை வரச்சொன்னான். திருப்பித்தருவதாக நான் பிடிவாதமாக மறுத்து விட்டேன்.

நான் பிரிந்த அதே நேரம் என்னருகே பிறேக் போட்டு நின்ற வேனில் இருந்து தலையை நீட்டினான் ஜேம்ஸ்.

ஒரு கம்பெனியின் விற்பனைப் பிரதிநிதி. அவர்களுடைய பொருட்களுடன் எங்கள் ஆபீசுக்கு வருவான், என்னுடைய செல்வாக்கால் சில பொருட்களை எங்கள்ஆபீசுக்கு கொடுத்துவருகின்றான். கண்டியில் படித்தவன். என் வயதினன் ஆனாலும் நீ என்று அழைக்க மாட்டான்.

என்னைப் பிரிந்து சென்றவனைக் கண்டதும் முகத்தில் ஒரு பெரிய ஆச்சர்யக் குறியைப் போட்டுக் கொண்டான்.

"என்ன சேர் இன்று நீங்கள் மாட்டினீர்களா? உங்களுடைய கிளாஸ்மேட் என்றிருப்பானே! கிங்ஸ் வூட்டில் என்னுடன் படித்ததாக என்னையே மடையனாக்கி விட்டான் முன்பொருதடவை ."

இன்னும் நான் அந்தப் பழைய—பசுமையான— பள்ளி நாள் நினைவுகளில் இருக்கின்றேன்.

நுகத்தை இறக்கி வைத்துவிட்டு—பாரம் குறைந்து பஞ்சு போல் லேசாகி மேகங்களுடன் மிதந்து கொண்டிருக்கிறேன்.

இவன் என்னடா என்றால் ஏமாற்று – இழப்பு என்று எதை எதையோ சிலுவையாக என் கழுத்தில் ஏற்றிக் கொண்டு ......

இந்த ஐம்பது ரூபாயால் நான் செய்ய வேண்டிய சில முக்கியங்கள் தடைபடலாம்..

இந்த அமரசிங்க என்னுடன் படிக்காதவனாகவே இருந்து விட்டுப் போகட்டும் .....

இது ஒரு இழப்பாக – ஒரு ஏமாற்றமாக எனக்குப்படவே இல்லை.

பறந்து கொண்டிருந்த என்னைப் பலவந்தமாக இழுத்து தலைகுப்புற தொப்பென விழுத்த முயல்கின்றானே இந்த ஜேம்ஸ் —

இவன் மேல் தான் எனக்கு கோபம் கோபமாக வருகிறது.

முன்னை நாள் நினைவுகளை நோக்கி மீண்டும் பறக்கத் தொடங்குகின்றேன்.

அந்த ஆறுகாமம் செல்வராஜ்.... சலவை மாறாத சட்டை கால் சட்டையும் சப்பாத்து மேல்சோடுமாய்........ எப்போதும் டிப்டொப்பாகத்தான் வருவான்.

என்னை ஒரு தடவை தனியே அழைத்து "நாமெல்லாம் பெரிய வகுப்பு மாணவர்கள் சப்பாத்துப் போடாமல் ஸ்கூலுக்கு வரக்கூடாது..." என்று நட்புடன் ஒரு பாசத்துடன் அறிவுரை கூறினான்.

என்னால் முடியாது என்பது எனக்குத் தெரியும். என்னுடைய வெறுங்காலைப் பார்த்துக் கொண்டேன். அவனுடைய காலையும் பார்த்துக் கொண்டேன். அவனுக்கு முடியும். அவன் போட்டுக்கொண்டு வரும் சப்பாத்தும் உயர்ரகம். கண்ணைப் பறிப்பது போல் மின்னும்.

அவனுக்கென்ன, அவனுடைய அப்பா தோட்டத்து டொக்டர் .....

சாயந்தரம்மனைவியை டொக்டரிடம் கூட்டிப் போவதாகக் கூறியிருந்தேன். கட்டாயம் கூட்டிப்போக வேண்டும்.

எப்படியும் ஒரு ஐம்பது ரூபாயாவது வேண்டும்.........

இந்த ஐம்பது ரூபாய்......
என்ன இது?
ஏன் இப்படி விழுந்து போகின்றேன்...... □

# ஜப்பானிய ஊழல்களில் உள்ளோடிநிற்கும்அமெரிக்கா

ஜப்பானில் அரசியல் உயர் மட்டத்தில் அண்மையில் நிகழ்ந்த லஞ்ச ஊழல் விவகாரம் அம்பலமானதைத் தொடர்ந்து சமபந்தப்பட்ட 3 அமைச்சர்கள் ராஜினுமாசெய்துள்ளனர். தொடர்ந்து பிரதமர் ரக்ஷிகாவும் ராஜினுமாச் செய்யப் போவதாக அறிவித்துள்ளார். இதற்கிடையில் பிரதமரின் நீண்டநாட் செலாளராயிருந்த

மேகவன்

ஈ. ஹே. அயோக்கி தற்கொலை செய்து கொண்டார். இப்படியான ஊழல் விவகாரங்கள் அம்பலமாவதும் அதைத் தொடர்ந்து பிரதமர் உள்ளிட்ட அமைச்சர்களும் ராஜினுமா செய்வதும் ஜப்பானிய அரசியல் வரலாற்றில் ஒன்றும் புதிதல்ல.

ஜப்பானிய அரசியலை எப்போதும் ஊழலிலிருந்து விலத்திப்பார்க்க முடியாது. அதுவும் அங்கே அந்த ஊழல் உயர் மட்டத்திலேயே நிகழ்வதும் ஒரு அரசியல் மரபு போலவே ஆகிவிட்டது என்ருலும் தவறில்லை. பெருந்தொகையான பணத்தை இவர்கள் உள்நாட்டுக் கைத்தொழில் நிறுவனங்களிடமிருந்தோ, வெளிநாட்டு கைத் தொழில் நிறுவனங்களிடமிருந்தோ, அல்லது வெளிநாட்டு அரசுகளிடமிருந்தோ லஞ்சமாகப் பெறுகின்றனர். நேரடியாகவோ, மறைமுகமாகவோ இவற்றில் அமெரிக்காவும், அல்லது அமெரிக்க நிறுவனங்களுமேதான் இந்த லஞ்சத்தை வழங்குவதில் பங்கேற்கின்றன. இவற்றின் உண்மையும் பின்னணியும் சுவாரஸ்யமாகவும், திகைப்பூட்டுபவையாகவும் இருக்கும். ஆசிய நாடுகளில் ஜப்பானே கைத்தொழிலிலும், தொழில் நுட்பத்திலும் பெருவளர்ச்சி அடைந்துள்ள நாடாகும். ஐரோப்பிய நாடுகளுடன் ஆசிய ஆபிரிக்க பிராந்தியங்களில் சந்தைப் போட்டிகளில் ஈடுபட்டுள்ளதுடன், அமெரிக்காவுடன் ஆசிய ஆபிரிக்க பிராந்தியங்களில் மட்டுமன்றி அமெரிக்காவிலும் அது சந்தை போட்டியில் ஈடுபட்டுள்ளது. அமெரிக்கரும் ஜப்பானிய உற்பத்திகளை மிக விரும்பிக் கொள்வனவு செய்யும் நிலை உருவாகியுள்ளது. இதனுல் 1987ஆம் ஆண்டு றீகன் நிர்வாகம் ஜப்பானிய பண்டங்களுக்கு 100% தீர்வை விதிக்கும் நிலையும் உருவாகியது, இத்தகைய பொருளாதார சந்தைப்போட்டியை சமாளிப்பதற்கு அமெரிக்கா கையாளும் ஒரு முக்கிய தந்திர நடவடிக்கைதான் ஜப்பானிய அரசியல்வாதிகளை விலை கொடுத்து வாங்கும் நடவடிக்கை ஆகும்.

ஒரு அமைச்சரை அல்லது பிரதமரை விலை கொடுத்து வாங்குவதன் மூலம் ஒரு அமெரிக்கக் கொம்பனி தனக்கு இசைவான ஒப்பந்தத்தை செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்கிறது. மேலும் பிரதானமான விடயங்களில் அரசுக்கும் அரசுக்கும் இடையிலான சமரசங்களுக்கும் இது வழிவகுத்து விடுகிறது. இதன் மூலம் அமெரிக்க கொம்பனிகள் அதிகலாபத்தை ஈட்ட முடிகிறது. உதாரணமாக ஒரு பொருளின் ஏற்றுமதி, இறக்குமதி பற்றி அமெரிக்க கொப்பனிகளுக்கு சார்பான வகையில் ஒரு சட்டத்தை அல்லது உபவிதிகளை ஒரு அமைச்சர் லஞ்சம் பெற்றுக் கொண்டு உருவாக்கக் கூடும். மேலும் அமெரிக்கக் கொம்பனிக்கும் ஜப்பானியக் கொம்பனிக்கும் இடையிலான கூட்டு நடவடிக்கையில் ஒரு உள்நாட்டுக் கொம்பனியே அதைப் பேணுவதற்கு லஞ்சத்தை வழங்கும். ஆனுல் இதில் ஒரு அமெரிக்கக் கொம்பனியே மறைகரமாக இயங்கும்.

இதில் உள்ள விசித்திரம் என்னவெனில் பாதிக்கப்படும் ஜப்பானியக் கொம்பனியே இதன் ரகசியங்களை அறிந்து வெளிக் கொண்டு வந்து விடுவதுதான். இதனுல் ஒரு புறம் ஊழல்கள் நிகழ்ந்தாலும் மறுபுறம் அவை அம்பலமாக்கப் படுவதும் தொடர்ந்து நிகழவே செய்கிறது. இம்முறை அது நவீனவடிவத்தில் நிகழும்.

ஆசியாவில் தொழில் நுட்பத்தில் பெருவளர்ச்சி அடைந்த ஜப்பானையே அமெரிக்கப் பெருவல்லரசு இத்தகைய லஞ்ச வித்தையால் மடக்க முடிகிறது என்ருல் ஏனைய மூன்ரும் உலக நாடுகளை அது என்னென்ன வித்தையால் மடக்கி வைத்திருக்கிறதோ? □

## உருளும் உலகில்

தேர்ந்தெடுக்கப்பட்ட சில

# தேசிய இனப் போராட்டங்கள் - 3

## காஷ்மீர்

சர்வதேசி

பிரித்தானிய இந்தியாவிலிருந்த ஒரு மன்னராட்சி அரசே காஷ்மீராகும். 1947 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆம் திகதி பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தியவிடுதலைச் சட்டம் (Indian Independence Act) இந்தியாவிலிருந்து பிரிந்து பாகிஸ்தான் எனும் அரசு உருவாகுவதை அங்கீகரித்தது. ஆயினும் பிரித்தானிய இந்திய எல்லைக்குட்பட்டிருந்த மன்னராட்சி அரசுகள் கொள்கையளவில் இச்சட்டத்திலிருந்து புறநீங்லானவையாகவே இருந்தன. இம்மன்னராட்சி அரசுகள் பாகிஸ்தானுடனே அல்லது இந்தியாவுடனே சேரக் கூடிய நிலையில் இருந்தன. நடைமுறையில் இவ்வரசுகள் தாம் விரும்பிய ஒரு தேசத்துடன் சேர்ந்ததற்கான நிலைமை பெருமளவு அவ்வரசுகளின் புவியியல் அமைவிடத்தோடு சம்பந்தப்பட்டவையாக இருந்தன. இந்த வகையில் இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரம் அடைந்த போது காஷ்மீர் அரசு இவ்விரு தேசங்களிலுமிருந்து புறநீங்கலான ஒரு சுதந்திர அரசாக மாறியது. காஷ்மீரின் அமைவிடம் பாகிஸ்தான் எல்லைக்கும் இந்திய எல்லைக்கும் இடையில் அமைந்துள்ளது. இதனுல் காஷ்மீர்அரசு, பாகிஸ்தான் இந்தியா ஆகிய இரு அரசுகளுள்ளும் எந்த அரசின் பக்கம் சேர்வதென்ற பிரச்சினைக்குரிய இடத்தில் இருந்ததென்பது தெளிவு. மேலும் இன்னெரு சிக்கலும் இதில் இருந்தது. இங்கு வாழும் மக்களில் 90% முஸ்லிம்கள், 10% தான் இந்துக்கள். ஆனுல் இவ்வரசின் மன்னர் ஓர் இந்துவாக உள்ளார். இந்திய உபகண்டத்தில் ஏற்பட்ட இந்து முஸ்லிம் பிரச்சினையின் காரணமாக, மக்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினர் என்ற வகையில் பாகிஸ்தான் பக்கம் சேர விரும்புவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். மன்னர் இந்து என்ற வகையில் இந்தியாவின் பக்கம் சாரும் வாய்ப்பு அதிகம். எனவே புவியியல் ரீதியாகவும் காஷ்மீர் இருதலைக் கொள்ளி நிலையில் உள்ளது. இதேவேளை மக்கள் ஒரு பக்கம் அரசாங்கம் இன்னெரு பக்கம் என்ற நிலையில் அதிலும் இருதலைக் கொள்ளி நிலையுண்டு.

இத்தகைய ஒரு அரசைத் தனது பக்கம் இணைத்துக் கொள்ளப் பாகிஸ்தான் முயன்றது. அதற்காக அது பொருளாதார ரீதியானதும் ஆயுத ரீதியானதுமான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் அங்கு வாழ்ந்த இனக் குழுக்களை ஆயுதபாணிகளாக்கி காஷ்மீர் அரசுக்கெதிராகப் போராடச் செய்ததுடன் பாகிஸ்தான் இராணுவம் சிவில் உடையில் காஷ்மீருக்குள் களவாகப் பிரவேசித்து, 1947 ஒக்ரோபர் 25ஆம் திகதி, காஷ்மீரின் வசந்தகாலத் தலைநகராகிய ஸ்ரீ நகரை நோக்கி முன்னேறிவிட்டதை இந்தியா அறிந்தது. இதேவேளை காஷ்மீரை இந்திய யூனியனுடன் இணைத்துக் கொள்ள தாம் விரும்புவதாகக் காஷ்மீர் ஆட்சியாளர்களால் இந்திய ஆட்சியாளருக்கு எழுதப்பட்ட கடிதம், 26ஆம் திகதி கிடைத்தது. 27ஆம் திகதி சட்டபூர்வமாக, ஜம்மு - காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியப் படைகள் காஷ்மீருக்குள் பிரவேசித்தன. இந்தியா பாகிஸ்தான் இராணுவத்தினருக்கிடையில் நடைபெற்ற மோதலின் பின்பு ஏறக்குறைய காஷ்மீரின் 1/3 பங்கு பாகிஸ்தானுடனும் ஏனைய பகுதி இந்தியாவின் பக்கமும் இணைக்கப்பட்டன.

இப்பிரச்சினையில் பாகிஸ்தானின் கோரிக்கை என்னவெனில் காஷ்மீர் மக்கள் முஸ்லிம்கள் என்ற வகையில் தங்களுடன் தான் இணைவார்கள் என்றும், ஆனுல் இந்தியா அதனைத் தடுக்கின்றது என்றும், எனவே காஷ்மீரில் ஒப்பங்கோடல் வாக்கெடுப்பை(Plebiscite) நடாத்த வேண்டும் என்பதாகும்.

அதனுல் இந்தியா இதற்கு சட்டபூர்வமாக காஷ்மீரின் ஆட்சியாளர் தம்முடன் இணைந்துள்ளனர் என்றும், காஷ்மீர் விடயத்தில் தலையிட பாகிஸ்தானுக்கு எந்தவித உரிமையும் இல்லையென்றும் பாகிஸ்தானுடைய இராணுவம் தாம் கைப்பற்றியுள்ள 1/3 பங்கு காஷ்மீரின் பகுதியில் இருந்து வெளியேருமல் ஒப்பங்கோடலை நடாத்த இயலாதென்றும், ஒப்பங்கோடலை நடாத்துவது முழுக்க முழுக்க இந்தியா சம்பந்தப்பட்ட விவகாரம் என்றும் கூறுகிறது.

இறுதியாக இந்தியா கூறியுள்ள விளக்கம் என்னவெனில், 1962ஆம் ஆண்டு வரை காஷ்மீரில் மூன்று தடவைகள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசு ஆட்சிக்கு வந்ததென்றும் இதன் மூலம் காஷ்மீர்மக்கள் ஒரு தடவையல்ல, மூன்று தடவைகள் ஒப்பங்கோடலில் வாக்களித்துள்ளார்கள் என்றும், எனவே தனியாக இதற்கென ஒரு ஒப்பங்கோடல் அவசியமில்லையென்பதாகும்.

1962ஆம் ஆண்டு ஆயூப் கான் அமெரிக்காவிலிருந்து பேசுகையில் ஏன் இந்தியா காஷ்மீரைக் கைவிடக் கூடாதென்று வினவினுர். அதற்குப் பதிலாக, நேரு பின்பு கூறிய கருத்து கவனிக்கத்தக்கதாகும். அதாவது காஷ்மீர் என்பது புவியியல் ரீதியாக இந்தியாவின் பாதுகாப்புடன் மிக நெருக்கமாகச் சம்பந்தப்படும் பிரதேசம் என்பதாகும். எனவே இதிலிருந்து ஒன்று புலனுகின்றது. காஷ்மீரை இந்தியா தனது பாதுகாப்பு நோக்கு நிலையில் இருந்துதான் அணுகியுள்ளதே தவிர, அதனை சுயநிர்ணய உரிமையுள்ள ஒரு தேசிய இனம் என்ற நோக்கு நிலையிலிருந்து அல்ல. பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் காஷ்மீரைத் தன்னுடன் இணைப்பதன் மூலம் தனது அரசைப் பலப்படுத்தல் என்ற நோக்கு நிலையிலிருந்து தான் அது ஆக்கிரமிப்பைச் செய்ததே தவிர காஷ்மீரைச் சுயாதீனமாக இயங்க அனுமதிக்க வேண்டும் என்பதற்காகவல்ல. எவ்வாறிருந்தாலும் இங்கு ஒரு விடயம் தெளிவு. அதாவது பலம் பொருந்திய இரு அரசுகளின் ஆதிக்கத்துக்கும் ஜம்மு - காஷ்மீர் மக்கள் உட்படவேண்டியிருந்தது என்பது தான். இன்னெரு வகையில் சொல்வதாயின் பலம் பொருந்திய இரு தேசங்களும் தத்தமது சக்திக்கு ஒட்டியவரை காஷ்மீரின் மீது தமது ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளனர் என்பது தான். எனவே இங்கு ஒரு தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை என்ற அம்சத்துக்குப் பதிலாக, அக்கம் பககமுள்ள அரசுகளின் வலிமையை அதிகரித்தல் என்ற அம்சம் ஜம்மு - காஷ்மீர் பிரச்சினையில் முதன்மை அடைந்திருந்தது. ஜம்மு - காஷ்மீர் மக்களின் தலைவிதியை அந்த மக்களின்றி வேறு அரசுகள் தான் நிர்ணயித்துள்ளன. இரு அரசுகள் அதில் தலையிட்டன. இவ்விரு அரசுகளின் பலத்தின் தன்மைக்கேற்ப இரு அரசுகளுக்குமிடையில் அது பங்கு போடப்பட்டுள்ளது. □

# மறைந்த மாணவனின் தன்னலமற்ற சேவை

கடந்த செவ்வாய்க்கிழமை பல்கலைக்கழகத்தில் நடந்த, மறைந்த மாணவன் சி. பிரபாகரனின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசிய வரலாற்றுத்துறை தலைவர் கலாநிதி சிற்றம்பலம், ''பிரபாகரன் இவ்வாரம் தமது இறுதி ஆண்டு பரீட்சையில் தோற்றுவதற்கு இருந்தார். அதைத்தொடர்ந்து அவர் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமை ஆற்றும் வாய்ப்பு இருந்தது. அத்தோடு அவர் பல்வேறு சமூகப் பணிகளுக்கும் முன்னின்று உழைத்தார் என்பதை பலரும் அறிவர். பல்கலைக்கழக நலன்களுக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடிய சம்பவங்களை யாரும் மறக்கமுடியாது.'' என்று குறிப்பிட்டார்.

இம்மாணவரின் நற்குணங்களைப் பற்றி அங்கு குழுமிநின்ருேர் பலவாறு கதைத்துக் கொண்டனர். அப்பொழுது அவரைப்பற்றி நன்கு அறிந்த ஒருவர் பின்வருமாறு கூறினுர்:

(11ஆம் பக்கம் பார்க்க)

# நிகழ்வுகள்

### 26-4-89 புதன்

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், இலண்டனிலிருந்து அதிகாலை கொழும்பு வந்து சேர்ந்தார். மாலை இலங்கை அரசுப்பிரதிநிதிகளுடன் முதற் சுற்றுப் பேச்சினை நடத்தினர் □ தமிழர்களுக்குத் தனிநாடு அவசியம் என்று முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், பத்திரிகையாளருக்கு கொழும்பில் அளித்த பேட்டியில் தெரிவித்தார்□ திருமண வைபவத்திலிருந்து இரவு 9 மணிக்குத் திரும்பிக் கொண்டிருந்த தம்பதிகளிடம், ஆயுதம் தாங்கிய சில இளைஞர்கள் 15,000 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்தனர். யாழ். கச்சேரி—நல்லூர் வீதியில் இது நடைபெற்றது□

### 27-4-89 வியாழன்

தென்னிலங்கையில் ஜே. வி. பி. வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்தியது. அரசின் அடக்கு முறை அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றைக் கண்டித்தே இதை நடாத்தியது□ கல்வியங்காட்டில் பருத்தித்துறை வீதிச் சந்தியில் இருந்த இந்தியப்படை முகாம் இன்று மூடப்பட்டது□ பல்கலைக்கழகத் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது□ கொழும்பிலிருந்து யாழ். வந்து கொண்டிருந்த பஸ்ஸின்மீது, மதவாச்சிக்கும் றம்பாவவிற்குமிடையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில், இரண்டு பயணிகள் காயமடைந்தனர்□

### 28-4-89 வெள்ளி

யாழ். ஈவ்லின் இரத்தினம் பல்லினப்பண்பாட்டு நிலையத்தில், 'வரலாற்றுக்கு முன்னைய ஸ்ரீ லங்கா' என்னும் தலைப்பில் ஆய்வுக்கட்டுரையை கலாநிதி எஸ். கே. சிற்றம்பலம் சமர்ப்பித்து உரையாற்றினர்□ பிரித்தானியத் தூதர் தனது அதிகாரிகளுடன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, பல இடங்களையும் சுற்றிப்பார்த்தார்□ அண்மையில் புதிதாக வந்த இந்திய பஸ் கொழும்புத்துறையில், இனம் தெரியாதோரால் எரிக்கப்பட்டது □ மிருசுவில் உசன் பகுதியில் மோதல் இடம் பெற்றது. இதனால் கண்டிவீதியூடான போக்குவரத்து சில மணி நேரம் பாதிக்கப்பட்டது□ விடுதலைப்புலிகளினால் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் குறித்து அனைத்து அரசியல் கட்சிகளுடனும் அரசு பேச்சுக்கள் நடத்துமென்று, அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார்□ புதிய இந்தியத்தூதர் எஸ். எல். மெஹ்ரோத்ரா வடபகுதிக்கு விஜயம் செய்து, இந்தியப்படையின் உயரதிகாரிகளுடன் உரையாடினர்□ முல்லைத்தீவு வவுனியாக் காட்டுப் பகுதிகளில் பயங்கர ஷெல் வீச்சு நடைபெறுகிறது□

### 29-4-89 சனி

தென் பகுதியில் தீவிரவாதிகள் தாக்கியதில் மூன்று படையினர் பலியாகினர்□ கிளிநொச்சியில் இந்தியப்படையினரின் தேடுதல் நடவடிக்கைகளினால் மக்கள் இடம் பெயர்கின்றனர்□

### 30-4-89 - ஞாயிறு

யாழ். பல்கலைக்கழக மாணவன் எஸ். பிரபாகரன் அமைதிப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமானர் □ யாழ். பல்கலைக்கழக மாணவ மாணவிகள் நால்வர், பல்கலைக்கழகப் பின்வீதியில் ஒரு வீட்டில் வைத்து இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டனர்□ காலை 9.15 மணியளவில் திருநெல்வேலியில் மோதல் சம்பவமொன்று இடம் பெற்றது. இதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுரேஷ் குமார் சயனைட் உட்கொண்டு மரணமானர்□ பருத்தித்துறையில் திடீர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுத் தேடுதல் இடம் பெற்றது□ மாலை கோண்டாவிலில் மோதல் இடம் பெற்றது. பின்னர் பொதுமக்கள் தாக்கப்பட்டனர்□

### 1-5-89 திங்கள்

பரந்தன் நவஜீவனம் அமைக்கப்பட்ட 30 ஆவது ஆண்டு நிறைவு இன்று கொண்டாடப்பட்டது□ மெதிரிகிரியாவில் கண்ணிவெடியினால் நான்கு பொலிஸார் கொல்லப்பட்டனர்□ யாழ். அரசாங்க அதிபர் வை. மு. பஞ்சலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார். விடுதலைப் புலிகள் இதற்கு உரிமை கோரியுள்ளனர்□ பல்கலைக்கழக மாணவனின் கொலையைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர் சங்கம் அறிக்கை வெளியிட்டது □ வவுனியா—மன்னார் வீதி அரசினர் பண்ணையிலிருந்த இந்தியப் படை முகாம், மாலை 5.45க்கு விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டது. 46 காவல் கைதிகள் தப்பிச் சென்றனர். 4 புலிகளும் 2 இந்தியப்பொலிசாரும் இறந்தனர்.

### 2-5-89 செவ்வாய்

பருத்தித்துறையில் திங்கள் மரணமான விடுதலைப்புலிகள் மூவருக்கு அஞ்சலியாக, அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது□ யாழ். அரசாங்க அதிபரின் கொலையைக் கண்டித்து ரெலோவும், ஈ. என். டி. எல். எவ் வும் அறிக்கை வெளியிட்டுள்ளன□ ராஜீவ் காந்தியின் விசேட செய்தியை, அவரின் சிறப்புத் தூதரான எஸ். கே. சிங் ஜனதிபதியிடம் கையளித்தார்□ பணுகொட இராணுவ முகாமை தீவிரவாதிகள் அதிகாலை தாக்கியதில் 5 படையினரும், 8 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்□ பல்கலைக்கழக மாணவர்கள் கல்வி கற்க வரும்போது எந்த நேரமும் அச்சத்துடனும் பதற்றத்துடனும் வர வேண்டியுள்ளது என்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி என். பாலகிருஷ்ணன் தெரிவித்தார். மறைந்த மாணவன் பிரபாகரனின் அஞ்சலிக் கூட்டத்திலேயே இவ்வாறு சொன்னர்□

# சுதேசி தர்மத்தின் சூக்குமம்

டொக்ரர் குமரப்பா ஒரு முறை கேரளாவுக்குச் சென்றிருந்தார். அம்மாநிலத்தில் குடிசைத் தொழில்கள் நலிவடைவதன் காரணம் என்னவென்பதை ஆராய்வது அவரது நோக்கம். அங்கு அவர் கிராமப்புறம் ஒன்றைச் சுற்றிப்பார்த்தார். அந்தக் கிராமத்தில் பாய்முடையும் தொழில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எனினும் ஏழ்மை நிரம்பிக் கிடந்தது. அங்குள்ள ஒரு குடிசைக்குள் நுழைந்தார். அந்த வீட்டுப் பெண்மணி இதை எதிர்பார்க்கவில்லை. டொக்ரர் குமரப்பா ஒரு பெரிய மனிதரல்லவா? அவரை எப்படி வரவேற்பது என்று அவள் தடுமாறினள். அருகிலுள்ள ஒரு பெரிய வீட்டுக்கு ஓடிச்சென்று அழகிய சித்திர வேலைப்பாடுள்ள ஒரு பாயை இரவலாக வாங்கி வந்து அதைக் கீழேவிரித்து அதில் உட்காருமாறு அவரைக் கேட்டுக்கொண்டாள். டொக்ரர் குமரப்பா அந்தப் பாயை உற்றுப் பார்த்துவிட்டு, ''இந்தப் பாய் எங்கே உற்பத்தியானது''? என்று கேட்டார். அருகிலிருந்த ஒருவர் ''இது பர்மாவிலிருந்து வாங்கி வந்த பாய்'' என்றார்.

டொக்ரர் அதுகேட்டுத் திடுக்கிட்டார். அவர்களுடைய பாய் முடையும் தொழில் நலிவதன் காரணம் இன்னதென்று அவருக்கு இப்போ தெளிவாயிற்று. ''இந்தப் பாயைத் தேடிக்கொண்டுவந்து விரித்து என்னை உட்காரச் சொன்ன தன் நோக்கம் என்ன?'' என்று அவர் கேட்டார். டொக்ரர் குமரப்பா போன்ற பெரிய மனிதர்களை உள்ளூரில் முடையும் கிராமத்துப் பாயில் உட்கார வைப்பது அவரது தகுதிக்கு எவ்வாறு பொருந்தும்? ஆகவே அந்த வெளிநாட்டுப் பாயை விரித்து உபசரித்ததாக அவர்கள் கூறினர்கள்.

அந்தக் கிராமத்திலேயே உற்பத்தியாகும் உள்நாட்டுப் பாயை அதனை உற்பத்தி செய்பவர்களே மதிக்காதபோது அதை மற்றவர்கள் எவ்வாறு மதித்து வாங்குவார்கள்? அவர்களுடைய உழைப்பில் அவர்களுக்கே பெருமிதம் இல்லை. இந்தத் தாழ்மையுணர்வுதான் அவர்களின் தொழில் தாழ்வுற்றுப் போவதற்கு முதல் காரணமென்பதை டொக்ரர் குமரப்பா விளக்கினர். அந்தக் குடிசையிலேயே முடையப் பெற்ற பாயை விரிக்கச்செய்து அதிலே உட்கார்ந்து மகிழ்ந்தார்.

தொகுப்பு: க.கனகராசா □

---

## மனிதன் . . .

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொத்த சுற்றிச்சுற்றிப் பறந்தது. அவர் தடியை வீசிக் காகத்தைத் துரத்துகிறர்'

குடிசைக்குக்கிட்ட வந்துவிட்டார்.

நாய் காலைச்சுற்றி நக்கியது. கால்களை மேலே தூக்கிப் போட்டுப் பிருண்டியது. சரையைப் பிடுங்கி விடவேண்டும் என்கிற அவா அதற்கு. சுந்தரம் சரையை மேலே உயர்த்திப் பிடித்துக் கொண்டார்.

வீட்டுக்கதவு சாத்திக்கிடந்தது.

செல்லம் எங்கேயோ போய் விட்டாளாக்கும் என்று எண்ணிக்கொண்டே சுந்தரம் பின்புறமாக நடந்தார். அவளை எங்குமே காணவில்லை. ஆனுல் ......

குடிசைக்குள் இருந்து கீச்சுக் கீச்சென்று ஏதோவொரு ஒலி ...... சிரிப்பொலி மட்டும் அவருக்குத் தெளிவாகக் கேட்டது. பனைமட்டை அடைப்புக்கூடாக உள்ளே பார்த்தார். அங்கே—

செல்வம்—அவர் மனைவி—முடமாவடிப் பொன்னையாவின் மூத்த மகன்... ... ஓ! கேவலம்.

ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. உடம்பு முழுவதும் நடுங்கியது.

அதற்குமேல் அவர் பார்க்கவில்லை, அப்படியே ஓசைப்படாமல் திரும்பிவிட்டார்.

சிறிதுதூரம் நடந்து செல்ல அந்த நல்லமனம் சிறிது சிறிதாகச் சமாதானம் அடைந்தது,

அதுக்கென்ன? அவள் நல்லாயிருக்கவேணும். நான் வருத்தக்காறன். அதுக்காகத் தன்ரை ஆசைகளெல்லாத்தையும் அவள் ஏன் அடக்கிக் கொள்ள வேண்டும்? அவள் சந்தோஷமாய் இருந்தாற் சரிதானே!

நாய் அவரைச் சுற்றிச் சுற்றி நக்கியது. சரையைப் பறிக்கப் பார்த்தது. சரையை அவர் மேலே உயர்த்திப் பிடித்துக்கொண்டார். அந்தக் காகமும் இன்னும் முயற்சிசெய்து தான் பார்த்தது; அவர் தடியை வீசிக் கலைத்தார்.

இப்போது அவர் அந்த உருளைக்கல்லை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறர். மனதிலே வேதனைக்குப் பதிலாக—கோபத்திற்குப் பதிலாக—ஒரு மகிழ்ச்சி!

இன்னும் கொஞ்ச நேரத்தில் செல்லத்துக்கென்றே வாங்கிய பொரிகடலையுடனும், ஓமப்பொடியுடனும் திரும்ப வீட்டுக்குப் போகப் போகிறர்,

ஏனென்றல்—

அவர் மனிதரில்லை; தெய்வம். □

---

## விலைகள் . . .

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்களில் ஏழு அல்லது எட்டுருபா விலைக்கும்விற்கப்படுகிறது. விற்பனையாளர்கள் விலை பற்றி கதைப்பதற்குத் தயாராயுமில்லை. தாம் மிக அவசர விற்பனையில் ஈடுபடுவதாயும் இதுபற்றி பேச அவகாசமில்லை என்பது போலும் நடந்து கொள்கின்றனர். இந்த அவசரம் நல்லதுதான். ஆனுல் யாருக்கு நல்லது? விற்பனையாளருக்கா? கொள்வனவாளருக்கா? அல்லது இருவருக்குமா?

வியாபாரிகளுக்கும் பிரச்சினைகள் இல்லாமலில்லை. சிலருக்கு நாணய மாற்று விகிதங்கள் கூட சரிவரத் தெரிவதில்லை. இந்த அறியாமை வாசகனை ஒரு பள்ளி மாணவனைப் பாதிக்கவேண்டுமா? ஒரு தொழிலாளியைப் பாதிக்க வேண்டுமா? இதனால் ''விலை ஒழுங்குபடுத்தும் வாசகர் குழு'' ஒன்று பலமான, ஒழுங்கான முறையில் செயற்பட்டு வியாபாரிகளுடன் கலந்து பேசி இதில் நலன்களை அதிகரிக்கச் செய்யலாம்.

தற்காலிகமாக ஏற்படும் பெற்றேல் தட்டுப்பாடுகள், மின் வெட்டுக்கள் போன்றவற்றல் உயர்த்தப்படும் விலைகள் நிலைமை வழமைக்குத் திரும்பியபின்னரும் குறைக்கப்படுவதில்லை; யாருமே இதில் கவலைப்படுவதுமில்லை. கட்டுப்படுத்துவதுமில்லை. யாழ்ப்பாணத்தின் பிரச்சினைகளினால் நொந்துபோயிருக்கும் குடும்பத்தலைவர்கள் சஞ்சிகைகளைக் கண்டு அருவருத்து ஒதுக்கும் நிலைக்கு இந்த விஷமான விலையேற்றங்களே காரணமாக இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் ஒரேயொரு அறிவுசார் பொழுதுபோக்காக அமையும் நூல் வாசிப்புப் பழக்கத்தை மழுங்கடிக்காமலும், சாதாரண வருமானம் பெறுவோரைச் சுரண்டாமலும் பாதுகாப்பதற்கு விலை ஒழுங்கு படுத்தல் மிக அவசியமானதாக உணரப்படவேண்டும். □

---

## பிரிட்டனில் . . .

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ் இலவசப் பத்திரிகைகளில் குறிப்பிடத்தக்கது லண்டன் போர்ற்றெயிற் (London portrait). இது 250 பக்கங்களுடையது. ஒரு பிரதியின் தயாரிப்புச் செலவு '90' பென்னிகள். 1,20,000 பிரதிகள் விநியோகிக்கப் படுகின்றன. இப்பத்திரிகை பெறும் வருமானம் 30 லட்சம் பவுண்ட்ஸ்கள். இப்பத்திரிகைக்கு விளம்பரக் கட்டணம் மிக அதிகம்.

இந்தப் போக்கில் இலவசப் பத்திரிகைகள் அதிகரித்துக் கொண்டு போனல், விளம்பரப் பத்திரிகைகளை இழுத்து மூட வேண்டிய நிலை ஏற்படும்! □

---

## மறைந்த . . .

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக நூலகம் 87 ஒக்ரோபரில் விமானக் குண்டு வீச்சுக்கு இலக்கானபோது, 'ஆகைவ்ஸ்' உட்பட மூன்று பகுதிகள் பாதிப்புற்றன. அப்பொழுது மழையும் பெய்து கொண்டிருந்தது. பல்கலைக்கழகத்தைவிட்டு மாணவர்கள் எல்லோரும் ஓடிவிட்டிருந்த நிலையில், இவர் அங்கிருந்த பல்லாயிரக்கணக்கான நூல்களையெல்லாம் மழையால் சேதமுருமல் பாதுகாப்பதில் சில நண்பர்களின் உதவியோடு செயல்பட்டார். இன்னும், ஷெல் அடிக்குப் பயந்து மக்கள் தம் வீடுகளில் இருந்த முதியவர்களை கைவிட்டு ஓடி விட்டிருந்தபோது, தமது கண்ணுக்கெட்டிய அத்தகைய அனுதரவான பலரை, பாதுகாப்பான இடங்களுக்கு இட்டுச் சென்று தன் முயற்சியில் இவர் உணவும் வழங்கினுர். □

திசை
THISAI

# யாழ். பல்கலைக்கழகத்தில் மீண்டும் ஒரு பலியெடுப்பு!

*அண்மையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சூட்டுக்கும் கைதுக்கும் இலக்காகி உள்ள இச் சூழ் நிலையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தின் அறிக்கையைக் கீழே தருகின்றோம்.*

— ஆர்.

1987 ஒக்ரோபர் இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து யாழ், பல்கலைக்கழகத்தின் சுமுகமான செயற்பாட்டிற்குக் குந்தகமாக இந்திய இராணுவத்தின் தொடர்ச்சியான நடவடிக்கைகள் அண்மைக்காலமாக உச்சக்கட்டத்தை அடைந்துள்ளன. எதுவித காரணமும் இல்லாமல் பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்வதில் ஆரம்பமாகிய இந்நடவடிக்கைகள் இன்று மாணவிகளைக்கூட விட்டுவைக்கவில்லை. 29-4-89 அன்று இரவு நேரத்தில் இரு மாணவிகள் உட்பட நான்கு மாணவர்கள் பல்கலைக்கழக சுற்றுடலில் அவர்களது இல்லத்திலேயே வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். வழமை போல இம்மாணவர்கள் கடுமையான சித்திரவதை செய்யப்பட்டதுடன், இரு மாணவிகளும் மின்சார சித்திரவதைக்கும் உள்ளாக்கப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக 30-04-89 அன்று கலைப்பீட இறுதி வருட மாணவன் சின்னத்துரை பிரபாகரன் இரவு 7-30 மணியளவில் இராணுவத்தின் கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் கொக்குவிலில் பலியானார்.

இக்கொலைக்கு நியாயம் கற்பிக்கும் வகையில் இம்மாணவன் புலிகள் இயக்க உறுப்பினர் என்று கூறியது மிகவும் நகைப்பிற்கிடமானது.

இன்றுவரை இந்திய இராணுவத்தின் கொலைவெறிக்கு இலக்கான யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை ஒன்பதாகும். இத்தகைய கொலைத்தர்பாரை ஒரு புறத்தில் நடாத்திக் கொண்டு மறு புறத்தில் அமைதியைப் போதிப்பதுதான் '' பஞ்சசீலமோ? ''

தமிழ் மக்களின் ஒப்புதலற்ற ஓர் ஒப்பந்தத்தைத் தீர்வாகத் திணித்துக் கொண்டு அதை ஏற்கும்படி நாளுக்குநாள் அப்பாவிப் பொதுமக்களை ஆயுத முனையில் துன்புறுத்திப் பணிய வைக்க முயல்வது காந்தியத்தின் வழிகாட்டலா ?

இவ்வகையில் பல்கலைக்கழக மாணவர்களின் குரல்வளைகள் நெரிக்கப்படும் போதும், அப்பாவிப் பொது மக்கள் துன்புறுத்தப்படும் போதும், தமிழ் மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதாக கூறிக்கொள்வோர் பார்த்துக்கொண்டிருப்பது விசித்திரமானது,

காலத்திற்குக் காலம் இவ்வாறான செயல்களை நிறுத்தும்படி கோரிக்கைகள் விடப்பட்ட போதும் அவற்றைப் பொருட்படுத்தாது நடவடிக்கைகள் தொடர்வது வருந்தத்தக்கது, தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குப் புறம்பாக எந்தவொரு தீர்வையும் திணிக்க முயல்வது நிரந்தர அமைதிக்கு வழிவகுக்காது.

## இசைமுகம்

*''சுதந்திர ஒளியினில் மனங்குளி*
*அதன்வழி திசையெலாம் துலங்கவே*

### யாழ். பல்கலைக்கழகத்தின் பணி

பல்கலைக் கழகங்களின் வரலாற்றின் ஆரம்பகாலந் தொட்டு இன்று வரை பல்கலைக்கழகங்கள் அறிவுக்கும், அதையொட்டிய பலதரப்பட்ட எழுச்சிகளுக்கும் ஆசனமாகவே இருந்து வந்துள்ளன.

கீழைத்தேய நாடுகளுள் பீக்கிங் பல்கலைக்கழகம் 'மே-ஃபோர்த் மூவ்மன்ற்' றை (May Fourth Movement) ஸ்தாபித்ததன் மூலம் பல புரட்சிகர எழுச்சிகளுக்கும் காரணமாய் அமைந்தது. ரெஹெரான் பல்கலைக்கழகம் ஈரானில் ஷாவுக்கெதிரான போராட்டத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டது. 1968 இல் உலகை உலுக்கிய பரீஸ் புரட்சிக்கும் பல்கலைக்கழகங்களே தலைமை தாங்கின.

அதுமட்டுமல்ல, தொழிலாளர்தான் பொதுவுடைமை புரட்சியின் மூலவர்கள் என்ற மார்க்ஸின் கொள்கையையே தலைகீழாக மாற்றி, மாணவர்களே இனிவரும் பொதுமைப் புரட்சியின் நாயகர்கள் என்னும் புதுவித தத்துவப் பாய்ச்சலுக்கே வழிவகுத்தவர்கள் பரீஸ் பல்கலைக்கழக மாணவர்களே.

இலங்கைக்கும் இது விதிவிலக்கல்ல. சமதர்ம, இடதுசாரிப் போக்கின் வடிகால்களாக கொழும்பு, பேராதனைப் பல்கலைக்கழகங்கள் ஆரம்பம் தொட்டே இயங்கி வந்துள்ளன. ஆனால் சுயபாஷையின் எழுச்சிக்குப் பின்னர் இனவாதக் கீற்றுக்கள் இவ்வோட்டத்துள் பாறைக்கற்களாய் துருத்தத் தொடங்கியதே இதன் பின்னடிப்பாகும்.

இப்பின்னணியில்தான் யாழ். பல்கலைக்கழகத்தின் பங்களிப்பை நாம் கவனிக்க வேண்டும்.

தமிழ்பேசும் இனத்தின் உரிமைப் போராட்டத்தின் இக்காலப் பகுதிகளில், ஆழமான தமிழ்த் தேசிய உணர்வைப் பேணும் மையமாக யாழ். பல்கலைக்கழகம் இயங்கி வந்துள்ளதே, அதன் முக்கிய பங்களிப்பாகும்.

தென்னிலங்கையிலிருந்து சிங்கள மாணவர்கள் இங்கு கல்வி பயில வந்தபோதும், பின்னர் இனவாதச் சிக்கலினால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட்ட போதும் அவர்களுடைய உடைமைகளுக்கோ, உயிர்களுக்கோ, நட்புக்கோ சேதம் ஏற்படாத வகையில் – அவர்கள் தமிழ் மாணவர்களை தம்மிடங்களில் நடத்தியதற்கு நேர்மாறாக – உணவும், உடையும், அன்பும் வழங்கி அவர்களை வழியனுப்பி வைத்த நிகழ்வானது தமிழ்த் தேசிய உணர்வென்பது வெற்று இனவாதமல்ல, ஆழமான மனித பண்பாட்டுச் செறிவு மிக்கது என்பதைக் காட்டியது யாழ். பல்கலைக்கழகத்தையே சாரும்.

இதன் தொடர் ஓட்டமாகவே தமிழ் பேசும் இனத்தின் சிந்தனையையும், செயலையும் தட்டியெழுப்பிய போதும் எப்பக்கமும் சாராது, எல்லா வகை முற்போக்குக் கருத்துகளுக்கும் களம் அமைத்து வந்துள்ளது. தமிழ்பேசும் இனம் தாக்கப்பட்டு, நிர்க்கதியாக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் இப்பல்கலைக்கழகத்திலிருந்தே மாணவர், தொண்டர்படை இம்மக்களின் துயர் துடைக்க, அபயம் அளிக்க முன் வந்தது.

மேலும் தென்னிலங்கையில் எல்லாப் பல்கலைக்கழகங்களும் நிசப்தமாக்கப்பட்டு அடித்து மூடப்பட்டிருந்த கடந்த இரண்டு ஆண்டுகளின் போதும் யாழ். பல்கலைக்கழகமே எல்லாத் தாக்குதல்களையும் தாங்கிக் கொண்டு, தமிழ்த் தேசிய உணர்வு தூர்ந்து போகாமல் கனன்று கொண்டிருக்கச் செய்து வந்துள்ளது.

ஆனால் இன்று, முன்னெப்பொழுதுமில்லாத நெருக்கடி இதற்கு. மாணவர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் அளிக்க முடியாத சூழல், இங்கே.

தமிழ் பேசும் இளைஞர்களின் உயிருக்கும், உயர் கல்விக்கும் யார் பொறுப்பு ?

யாழ். பல்கலைக்கழகம் பாதுகாப்பான சூழலில் தொடர்ந்து இயங்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ? அல்லது தென்னிலங்கையில் நடப்பது போல் இதையும் மூடிவிடுவதற்கான கைங்கரியங்கள்தான் மேலும் மேற்கொள்ளப்படுமா ? மாணவர் சமுதாயம் கவனமாக உள்வாங்க வேண்டிய கேள்விகள் இவை.

## தோட்டத் தொழிலாளர்களின் வருமானத்திற்கு 'கவ்வாத்து'

அரசின் இரண்டு பெருந் தோட்ட நிறுவனங்களும் 'வங்குரோத்து' நிலையை அண்மித்துள்ளதாக 'ஐலன்ட்' (ஏப்ரில் 30) முன்பக்கச் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது.

இன்றைய வருமானத்திலிருந்து நாளாந்த பணச்செலவுகளை ஈடு செய்ய முடியாத நிலையில் அவை உள்ளன என்றும், அச்செய்தி குறிப்பிடுகின்றது.

உற்பத்திச் செலவுகளில் 65—75 வீதம் தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப் படுகின்றது எனக் குறிப்பிடும் அச்செய்தி, தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் மிதமிஞ்சிய ஊதியப் பிரச்சினையை நிவர்த்தி செய்வதன் மூலமே, சம்பந்தப்பட்ட அரச கூட்டுத்தாபனங்களின் நிதி நிலையை அபிவிருத்தி செய்யலாம் என்று சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனம் (ஐ. டி. ஏ.) கூறியுள்ளதை மேற்கோள் காட்டுகிறது.

உலகவங்கி போன்ற முதலாளித்துவ நிறுவனங்களுடன் நெருங்கிய தொடர்புற்ற ஐ. டி. ஏ. ஆகியவற்றின் 'கருணை' யார் மீது இருக்கும் என்பதனை விளக்க வேண்டியதில்லை.

ஐ. டி. ஏ. யின் தகவுரை செயற்படுத்தப்பட்டால சாதாரண தோட்டத்தொழிலாளி இப்போது தனக்குக் கிடைத்துள்ள வாக்குரிமையால் தனது வெறும் வயிற்றை நிரப்பவேண்டியதுதான்!

## எட்டாப் பழம் புளிக்கிறது சந்திரிகாவிற்கு

மக்களின் வாக்குகளால் பெறாத நாடாளுமன்ற ஆசனம் குறித்து சச்சரவுப்படுவதில் எந்தவிதப் பயனுமில்லை. இதுபற்றி இழுபறிப்படுவது நேரத்தையும் சக்தியையும் வீண்விரயமாக்குவதே. ஆதலால் தற்போதைய நாடாளுமன்றத்திற்கு நான் நியமிக்கப்படுவதை நிராகரித்துவிட்டேன்.

இவ்வாறு திருமதி சந்திரிகா குமாரணதுங்க, இலண்டனிலிருந்து கொழும்புப் பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ள நீண்ட கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். இக்கடிதம் ஏப்ரில் 30ஆம் திகதி பிரசுரிக்கப் பட்டது.

இன்று நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடி நிலையில், இத்தகைய விடயத்திற்கு மிதமிஞ்சிய முக்கியத்துவம் கொடுக்கப்படுவதைத் தன்னால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் சந்திரிகா குறிப்பிடுகின்றார்.

கடிதத்தை கவனமாக வாசிக்கும் வாசகர்களுக்கு எல்லாம் புரியும்.

நான்கு வாரங்களுக்கு முன் ஐக்கிய சோஷலிச முன்னணியும், தனது கட்சியான எஸ்.எல்.எம்.பியும் தன்னை நியமிப்பதென முடிவு செய்துள்ளதாகத் தனக்கு அறிவித்ததாகவும், ஏறக்குறைய இரண்டு மாதங்களாக தனது கட்சியும், ஐ.சோ.மு.வும் இது குறித்து ஊசலாடியதாகவும் சந்திரிகாவே தனது கடிதத்தில் கூறுகின்றார்.

சொந்தக் கட்சிக்குள்ளேயே குத்துவெட்டு. இதனைப்பூசி மெழுகுவதற்கு தன்னலமற்ற, தத்துவார்த்தப் பாவனை.

எட்டாப் பழம் புளிக்கும் தானே?

## தெற்கோடு . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குத் தடையாக இருப்பின் தென்னிலங்கைப் பாட்டாளி மக்களுடன் சேர்ந்து போராடி இந்த அரசை விரட்ட தயங்க மாட்டோம். அத்துடன் எமது ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து ஈழக் குடியரசு விழாவை நடாத்த தயங்க மாட்டோம்.

வடக்கு மாகாணசபை நிதியமைச்சர் பி. கிருபாகரன் பேசுகையில் கூறியதாவது : இலங்கை அரசு எமக்கு உரிமைகளைத் தராவிடின் எமது சார்பில் கைச்சாத்திட்ட இந்தியாவை நெருக்குவோம். அவர்களும் அசமந்தமாக இருந்தால் இந்தியாவுக்கு எதிராக சர்வதேச நெருக்கடிகளைக்கொடுப்போம்.

## இலங்கை . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணராமல் இருப்பது விந்தையே.

இந்தியாவிலிருந்து வந்த விசேட தூதுவருடனும், தீவிரவாதிகளின் பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசித்த பின்னரும், அரசமைப்பு என்ற ஓர் சட்டத்துக்குள் எல்லாவற்றையும் — கையை, காலைச் சீவி — அடைக்கலாம் என்று பிரேமதாச நினைத்தால், இறுதியில் முட்டாள் பட்டம் பெறப் போவது அவரே.

அரசமைப்பு என்ன புனித சாசனமா ?

## இலண்டனில் 'புதியதொரு வீடு'

மறைந்த ஈழக்கவிஞர் மஹாகவியின் நாடகமான புதியதொரு வீடு அண்மையில் இலண்டனில் நிகழ்த்திக் காட்டப்பட்டது. 'களரி' என்ற குழுவினரால் இது நிகழ்த்தப்பட்டது. ஈழத்தின் முக்கிய நாடக இயக்குநர்களில் ஒருவரும், தற்போது இலண்டனில் வசிப்பவருமான அ. தார்சீசியஸ் இந்த நாடகத்தை இயக்கியமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 6-5-1989இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.